26TH
DECEMBER
2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 62 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com

# மியன்மார் அகதிகள் விடயத்தில் பல்வேறு அமைச்சுக்கள் ஒன்றிணைந்து பணி

**அடிப்படை வசதிகள்**

**போதுமான பாதுகாப்பு**

**வெளிவிவகார பிரதியமைச்சர் அருண் ஹேமசந்திர!**



மியன்மார் அகதிகளின் பாதுகாப்பு, நலன்பேணல், அவர்களது ஏனைய நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் மிகவும் கவனமாக செயற்பட்டு வருவதாகவும் பல்வேறு அமைச்சுக்கள் ஒன்றிணைந்து இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த பிரதியமைச்சர், அகதிகள் என்ற மனிதாபிமானத்துடனேயே இவர்களைப் பார்க்கிறோம்.இதனால் தான் இவர்களைக் கோப்பாப்பிலவு விமானப் படைத்தளத்தில் தற்போது வைத்திருக்கிறோம்.

இங்கு வேறு எதனையும் நாங்கள் எடுத்துக் கொள்ளவில்லை. எனவே இது தொடர்பாக யாரும் குழப்பமடையவோ, கவலை அடையவோ தேவையில்லை.

02ம் பக்கம்பார்க்க...

# பிரதமர் ஹரிணிக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு

**முன்னாள் துணை வேந்தர் சுஜீவ அமரசேன தாக்கல்!**



பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று 02ம் பக்கம்பார்க்க...

# இஸ்ரேல் நடாத்திய தாக்குதலில் ஐந்து ஊடகவியலாளர்கள் பலி!

இஸ்ரேலிய விமானப்படை இன்று அதிகாலை காஸாவில் நடாத்திய வான் தாக்குதலில் ஐந்து ஊடகவியலாளர்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர்.

அல்-குட்ஸ் டுடே செய்திச் சேவையைச் சேர்ந்த ஐந்து ஊடகவியலாளர்கள் இன்று (26)

02ம் பக்கம்பார்க்க...

# ஆறு பேரை உள்ளடக்கிய புதிய ஹஜ் குழு நியமனம்

**ஹஜ் கோட்டாக்கள் குறித்து விரைவில் தீர்மானம்**




அடுத்த ஆண்டின் ஹஜ் ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்காக புத்தசாசன சமய விவகார அமைச்சர் சுனில் செனவி ஆறு பேர் கொண்ட ஹஜ் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

புதிய ஹஜ் குழுவின் தலைவராக பிரபல கணக்காளரும் கே பி எம் ஜி

02ம் பக்கம்பார்க்க...

# சுனாமிக்கு இருபது ஆண்டுகள் நாடெங்கும் நினைவேந்தல் நிகழ்வுகள்!



நாட்டில் பாரிய அனர்த்தத்தை ஏற்படுத்திய சுனாமி ஏற்பட்டு இன்றுடன் இருபது ஆண்டுகள் பூர்த்தியாகி உள்ளது.

2004 டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட இந்த அனர்த்தத்தில் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர்

03ம் பக்கம்பார்க்க...

# பிரிக்ஸ் கூட்டமைப்பில் புதிதாக ஒன்பது நாடுகள்!

**இலங்கைக்கு வாய்ப்பு கிட்டவில்லை!**

பிரிக்ஸ் கூட்டமைப்பினை விரிவடையச் செய்யும் வகையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.இதன் ஒரு அங்கமாக இக் கூட்டமைப்பில் புதிதாக ஒன்பது நாடுகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன. அடுத்த ஆண்டு ஜனவரி முதல் இந்த ஒன்பது நாடுகளும் கூட்டமைப்பில் இணைத்துக்

02ம் பக்கம்பார்க்க...

# 20 இலட்சமாவது சுற்றுலா பயணிக்கு பெரு வரவேற்பு!



இந்த ஆண்டில் இலங்கையின் சுற்றுலாத் துறை யின் மைல்கல்லாக இருபது இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.

இருபது இலட்சமாவது சுற்றுலா பயணி இன்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய போது குறித்த பயணி சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் பேராசிரியர் ருவன் ரணசிங்க தலைமையில் வரவேற்கப்பட்டார்.

சுற்றுலாத் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் திணைக்கள தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# சிறுவர்களை விளம்பரத்துக்கு பயன்படுத்துவதற்கு தடை

**வர்த்தமானி விரைவில்!**

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களை விளம்பரங்களுக்குப் பயன்படுத்தத் தடை விதிக்கும்

02ம் பக்கம்பார்க்க...



## பிரதமர்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ருஹூணை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் சுஜீவ அமரசேனவே அந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

கோட்டாபய ஆட்சியில் எழுந்த குற்றச்சாட்டுக்கள்: அநுரவிடம் தமிழரசு கட்சி முன்வைக்கும் கோரிக்கை

கோட்டாபய ஆட்சியில் எழுந்த குற்றச்சாட்டுக்கள்: அநுரவிடம் தமிழரசு கட்சி முன்வைக்கும் கோரிக்கை

அவர் தனது மனுவில், ருஹூணை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியில் இருந்து தான் அகற்றப்பட்டமையானது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் தொடர்புடைய அரசியல் காரணங்களின் அடிப்படையில் நடைபெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ,கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ஹரிணி இந்த வழக்கின் முதல் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

அத்துடன், கல்வி அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக ஆசிரியர்கள் கூட்டமைப்பு ஆகியோர் ஏனைய பிரதிவாதிகளாக அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரிக்ஸ்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கொள்ளப்படவுள்ளன.

மலேசியா, இந்தோனீசியா, தாய்லாந்து, பெலருஸ், பொலிவியா, கியூபா, உகாண்டா, கசக்ஸ்தான், உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட ஒன்பது நாடுகள் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணைத்துக்கொள்ளப்பட உள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை ரஷ்யாவின் கசான் நகரில் நடைபெற்ற மாநாட்டில் பிரிக்ஸ் கூட்டமைப்பில் சேர இலங்கை உட்பட 35 நாடுகள் விண்ணப்பித்திருந்தன.

பிரிக்ஸ் அமைப்பில் சேர தமது விருப்பத்தை வெளிப்படுத்திய கடிதமொன்றை இலங்கை வெளிவிவகார அமைச்சு ரஷ்யா ஜனாதிபதி விளாடிமீர் புடினுக்கும் அனுப்பியிருந்தது.

என்றாலும், விண்ணப்பித்த 35 நாடுகளில் 9 நாடுகளை மாத்திரமே இணைத்துக்கொள்ள கூட்டமைப்புக்கு தலைமை தாங்கும் ரஷ்யா நடவடிக்கை எடுத்துள்ளது.

“மாநாட்டின் நோக்கம் பிரிக்ஸ் கூட்டமைப்பை விரிவடையச் செய்வதாகும். அது தற்போது வெற்றிகரமாக நடந்துள்ளது. இணைக்கப்படும் புதிய நாடுகளுக்கு ஒப்பந்தங்கள் அனுப்பட்டுள்ளன.” என்று ரஷ்ய அதிகாரி யூரி உஷகோவ் தெரிவித்துள்ளனர்.

மலேசியா, இந்தோனீசியா, தாய்லாந்து, பெலருஸ், பொலிவியா, கியூபா, உகாண்டா, கசக்ஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் கூட்டமைப்பில் சேர ஒப்புதல் தெரிவித்துள்ளன. அதனையடுத்து, வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் இந்த நாடுகள் கூட்டமைப்பில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் பிரிக்ஸ் கூட்டமைப்பில் சேர மேலும் நான்கு நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. விரைவில் அவர்களும் அமைப்பில் இணைவார்கள் என்றும் யூரி உஷகோவ் கூறியுள்ளார். 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் பிரிக்ஸ் அமைப்புடன் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்துள்ளன. ஒரே மாதிரியான சிந்தனைகள் கொண்ட நாடுகள் ஒன்றாக செயல்படுவது சிறப்பு எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக கசான் மாநாட்டுக்குப் பின்னர் சமூக வலைதளங்களில் செய்தி வெளியான போது அதனை இலங்கைக்கான ரஷ்ய தூதரகரம் நிராகரித்திருந்த போதிலும் புதிதாக இணைக்கப்பட உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்பது சுட்டிக்காட்டதக்கது.

## இஸ்ரேல்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அதிகாலை காசாவின் நுசிராத் அகதிகள் முகாமில் உள்ள அல்-அவ்தா மருத்துவமனை அருகே அவர்களின் ஒளிபரப்பு வான் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியதில் கொல்லப்பட்டனர்.

பெரிய சிவப்பு எழுத்துக்களில் "PRESS" என்று குறிக்கப்பட்ட வாகனம் மோதிய போது, மருத்துவமனையில் நடந்த நிகழ்வுகளை பத்திரிகையாளர்கள் செய்தியாக்கிக் கொண்டிருந்த போது, குறித்த வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

## ஆறு பேரை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நிறுவனத்தின் பங்காளருமான ரியாஸ் மிஹிலார் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு ஏனைய அங்கத்தவர்களாக சிரேஷ்ட சட்டத்தரணி என் டி எம் அஸூர், தொழிலதிபர் பௌஸூல் ஹக், விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் வை.எல்.எம். நவவி, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சுற்றுலா முகாமைத்துவ பிரிவின் பேராசிரியர் எம் எஸ் எம் அஸ்லம் மற்றும் பதவி வழியாக முஸ்லிம் சமய விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் எம் எஸ் எம் நவாஸ் ஆகியோர் இக்குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே முன்னாள் இராஜதந்திரியான அன்சார் இப்ராஹிம் தலைமையில் நியமிக்கப்பட்டிருந்த ஹஜ் குழு கலைக்கப்பட்டே புதிய ஹஜ் குழு நியமிக்கப்பட்டுள்ளது. பிரபல தொழிலதிபர் பௌஸூல் ஹக்கும் புதிய குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதே நேரம் ஹஜ் குழுவினால் பகிர்ந்தளிக்கப்பட்ட ஹஜ் கோட்டாக்கள் உயர்நீதிமன்றத்தினால் ரத்து செய்யப்பட்டுள்ளது.

புதிய ஹஜ் குழு இது தொடர்பாக விரைவில் தீர்மானம் ஒன்றை எடுக்கும் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சிறுவர்களை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வர்த்தமானி அறிவித்தல் இன்னும் சில நாட்களில் வெளியிடப்படும் என்று அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வர்த்தமானி அறிவித்தல் குற்றவியல் சட்டம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் கீழ் வெளியிடப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தக விளம்பரங்களில் சிறுவர்களை அவசியமற்ற வகையில் பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடந்த அரசாங்கங்கள் இது தொடர்பில் பல தடவைகள் வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்ட போதும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை எனப் பல தரப்பினர் தெரிவித்து வருகின்றனர்.

## மியன்மார்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மியன்மார் அகதிகள் தொடர்பில் வெளியாகிய அறிவிப்பு

தேசிய மற்றும் சர்வதேசரீதியான சட்ட திட்டங்களுக்கு ஏற்ப ஒருங்கிணைப்புடன் இவர்களை நாங்கள் கையாண்டு கொண்டிருக்கின்றோம்.

அகதிகள் எவரும் உடல் ரீதியாகவோ உளரீதியாகவோ துன்புறுத்தல்களுக்கோ ஆளாககூடாது என்பதில் மிகக் கவனமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இவர்கள் தொடர்பாக வெளிவகார அமைச்சு, பொது நிர்வாக உள்நாட்டு அலுவலர்கள் அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்புத் துறை மற்றும் சுகாதாரத்துறை ஆகியன ஒன்றாக இணைந்து பணியாற்றிக் கொண்டு வருகின்றது.

மேலும், மியன்மார் அகதிகள் விவகாரத்தை , ஒரு சாரார் தங்களுடைய சுய அரசியலுக்காக அகதிகளை சரியாக பராமரிக்கவில்லை என்று கூறுகின்றனர்” என்றார்.






# சவுதி இமாம் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றார் ஹெம்மாதகம ஷெய்க் ரிஸ்மி



மாவனல்ல, ஹெம்மாதகமவைப் பிறப்பிடமாகக் கொண்ட அஷ்ஷைக் முஹம்மது ரிஸ்மி முஹம்மது ஜுனைத் சவுதி அரேபியாவின்

ரியாத் அல் இமாம் முஹம்மத் பின் சஊத் இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி (பி.ஏ), முதுகலைமாணி (எம்.ஏ), மற்றும் பி.எச்.டி வரை உயர் கல்வி கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார்.

காலி இப்னு அப்பாஸ் அரபுக் கல்லூரியில் மௌலவிப் பட்டம் பெற்ற இவர், அல் இமாம் முஹம்மத் பின் சஊத் இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் இணைந்து உயர்கல்வியைத் தொடர்ந்தார். இவர் ரியாத்தில் தனது மேற்படிப்பைத் தொடர்ந்த காலங்களில் அங்குள்ள தஃவா நிலையங்கள் ஊடாக தஃவா பணிகளிலும் சிறப்பாக ஈடுபட்டார்.

கலாநிதி பட்டம் பெற்றுக்கொண்டுள்ள முஹம்மது ரிஸ்மியை கௌரவிக்கும் நிகழ்வொன்றை இத்திஹாதுல் அப்பாஸ ிய்யீன் எனும் அமைப்பு ரியாத் அல்மாஸ் ஹோட்டலில் (24.12.224) ஏற்பாடு செய்து நடாத்தியது. இந்நிகழ்வில் இலங்கையின் அல் இஹ்ஸ ான் நலன்புரி அமைப்பின் தலைவரும் இப்னு அப்பாஸ் அரபுக் கல்லூரியின் ஸ்தாபகருமான அஷ்ஷைக் பத்/ஹர்ரஹ்மான் பஹ்ஜி, இப்னு அப்பாஸ் அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷைக் தீனுல் ஹசன் பஹ்ஜி, இப்னு அப்பாஸ் அரபிக் கல்லூ ரி ஆசிரியர் அஷ்ஷைக் அதாஉல்லாஹ் பஹ்ஜி, இலங்கை அல் ஹிக்மா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷைக் ஷை/ஹத்தீன் மதனி, இலங்கை தகாதுப் நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷைக் இஸ்ஹாக் அப்பாஸி ரியாத் மாநகரில் தஃவா மற்றும் அழைப்புகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அஷ்ஷைக் மப்ஹூம் பஹ்ஜி அஷ்ஷைக் ளபருள்ளாஹ் பஹ்ஜி அஷ்ஷைக் ரிப்லான் பஹ்ஜி உட்பட இன்னும் பலர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

அஷ்ஷைக் மப்ஹூம் பஹ்ஜி தலைமையில் நடைபெற்ற இக்கௌரவிப்பு நிகழ்வின் போது கலாநிதி முஹம்மத் ரிஸ்மிக்கு சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

ஹெம்மாதகமையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவரும் பொதுச் செயலாளரும் கபூரிய்யா அரபிக் கல்லூ ரியின் அதிபருமான மர்ஹூம் அஷ்ஷைக் எம்.எம்.ஏ.முபாரக் மதனியின் மருமகனாவார்.

கலாநிதி ரிஸ்மி சமூக நல சேவைகளில் ஈடுபடக்கூடியவராகவும் உயர்கல்வியை மேற்கொண்ட காலப்பகுதியில் இலங்கைக்கு தம்மால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்யக்கூடியவராகவும் இருந்துள்ளார்.

---

## சுனாமிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டதுடன் பெருந்தொகையானோர் காணாமற் போயினர்.

இந்த பாரிய அனர்த்தத்தில் கொல்லப்பட்டோர் பாதிகாகப்பட்டோரை நினைவு கூறுமுகமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. பள்ளிவாசல்கள், பௌத்த, இந்து, கிறிஸ்தவ மத வழிபாட்டுத் தலங்களில் காலையில் விஷேட நிகழ்வுகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

சுனாமியில் இறந்தோருக்காக இரண்டு நிமிட மௌனமும் அனுஷ்டிக்கப்பட்டன.

## அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

துன்புறுத்தும் வேதனையும் வீரம் பொருத்திய செயலும் (ஆயினும் எவரேனும்) அக்கிரமத்துக்கு (அதேயளவு) பழிவாங்கினால், அதனால் அவர்களுக்கு எதிராகக் (குற்றஞ்சாட்ட) யாதொரு வழியும் இல்லை.” (42:41)

”ஆனால் (அளவு மீறி) மனிதர்கள் மீது அக்கிரமம் செய்து நியாயமின்றிப் பூமியில் கொடுமை செய்வோருக்கு எதிராகத்தான் (குற்றஞ்சாட்ட) வழி இருக்கிறது. இத்தகையோருக்கு துன்புறுத்தும் வேதனையுண்டு.” (42:42)

”எவரேனும் (பிறர் செய்த தீங்கைப்) பொறுத்துக் கொண்டு மன்னித்துவிட்டால், நிச்சயமாக இது மிக்க வீரம் பொருந்திய காரியங்களில் உள்ளதாகும்.” (42:43)

““(மெய்யாகவே) நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டு நடப்பீர்களாயின், உங்களுடைய (நன்மையான) செயல்களில் எதையும் அவன் உங்களுக்குக் குறைத்துவிட மாட்டான். நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்போனும், கிருபையுடையோனுமாக இருக்கின்றான்.” (49:14)

(உண்மையான) விசுவாசிகள் எவர்களென்றால், அவர்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் (மெய்யாகவே) விசுவாசங் கொண்டு பின்னர் எவ்வித சந்தேகமும் கொள்ளாது அல்லாஹ்வுடைய பாதையில் தங்களுடைய உயிர்களையும், பொருள்களையும் தியாகம் செய்து யுத்தம் புரிவார்கள். இத்தகையோர்தாம் (தங்கள் விசுவாசத்தில் உண்மையானவர்கள்.” (49:15)

”(நபியே) நீர் கூறும் (நீங்கள் மார்க்கத்தை பின்பற்றி நடப்பவர்களென்று உங்கள் வழிபாட்டை (யும், மதபக்தியை) யும் நீங்கள் அல்லாஹ்வுக்கு அறிவிக்கின்றீர்களா? அல்லாஹ்வோ வானங்களிலும் பூமியிலும் உள்ளவைகளை நன்கறிந்தவன். அன்றி சகல பொருள்களையுமே அல்லாஹ் நன்கறிந்தவன்” (49:16)




www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 DECEMBER 26 - THURSDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# வீதி விபத்துக்கள் குறித்து கடும் அவதானம் தேவை

இவ்வாரத்தில் 24 மணி நேரத்துக்குள் 10 வாகன விபத்துகளில் 13 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் மேலும் பலர் காயமடைந்துள்ளதாகவும் பத்திரிகை செய்தி அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மக்கள் தனது தேவைக்காக செல்லும் பஸ்களில் இவ்வாறான சம்பவங்கள் காரணமாக எத்தனையோ பேர் கொல்லப்பட்டிருப்பதோடு பலர் காயங்களுக்கு உள்ளாகி தமது பாதங்களை இழந்து தவிக்கின்ற தகவல்களை நாம் நாளுக்கு நாள் கேள்விப்படுகின்றோம். 30 ஆண்டு யுத்தத்தினால் கொல்லப்பட்ட பாதுகாப்பு படை வீரர்கள் மற்றும் பொதுமக்களை விட அதிகமானவர்கள் ஒரு வருடத்தில் இந்த வீதி விபத்தினால் கொல்லப்படுவதை அவதானிக்க முடிகிறது. மக்களது உயிர்களை இவ்வாறு பறிப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை. சில தினங்களுக்கு முன் ஹட்டனிலிருந்து கண்டி வரை பயணித்த தனியார் பஸ் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை மீறி மல்லியப்பு பிரதேசத்தில் 20 அடிக்கு கீழ் உள்ள தேயிலை தோட்டம் ஒன்றில் விழுந்தது. இந்த விபத்துக்கு சாரதியின் கவனயீனமே காரணம் என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். சாரதி மிக வேகமாக வாகனத்தை செலுத்தி உள்ளதோடு காதுகளில் தனது மொபைல் தொலைபேசியை பொருத்திக் கொண்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அப்பாவி மக்களே கொல்லுவது மற்றும் காயப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தான் இந்த சாரதி செயல்பட்டாரா என்ற கேள்விகள் தொடுக்கப்படுகின்றன. இரத்மலான ஜோன் கொத்தலாவல மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றும் விபத்துக்குள்ளாகி மூன்று மாணவர்கள் கொல்லப்பட்டதோடு பெருந்தொகையானோர் காயத்துக்கு உள்ளாகிய துக்ககரமான சம்பவம் ஒன்றும் அண்மையில் பதிவாகி இருந்தது. பஸ் வண்டியானது பப்படத்தைப் போன்று நொறுங்கி இருந்தது. மிதமிஞ்சிய வேகத்தில் அந்த பஸ் வண்டி பயணித்திருந்தமை அதற்குப் பின்னால் வந்த வாகனம் ஒன்றின் கேமராவில் பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. சாரதியின் குற்றம் சம்பந்தமாக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி இன்னும் அறியக் கிடைக்கவில்லை. விபத்துகளால் கொல்லப்படுகின்றவர் ஒரு முழு குடும்பத்தின் வருமானத்தை தேடும் பொறுப்பில் இருப்பவராக இருக்கலாம். விபத்தில் அவரை இழப்பதனால் வருங்காலத்தில் அந்த குடும்பமே பொருளாதார ரீதியாக பாதிப்படையலாம். இவ்வாறான விபத்துக்களால் பலர் சதா அங்கவீனர்களாக மாறியுள்ளனர். இவ்வாறு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விபத்துக்கள் காரணமாக நாளாந்தம் பலர் கொல்லப்படுவதையும் காயத்துக்கு உள்ளாவதையும் அவதானிக்க முடிகிறது. இதுகுறித்து அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க தவறினால் மக்கள் பெரும் கஷ்டத்துக்கே உள்ளாகுவர். இது தொடர்பாக அரசாங்கம் கடுமையான சட்டங்களை அமுல்படுத்த வேண்டும். தனியார் பஸ்களும் இலங்கை போக்குவரத்து சபையினால்நடத்தப்படும்பஸ்களும்வீதிகளில்போட்டிக்குஓடுவதையும்காணமுடிகிறது. இதனால் தமது கட்டுப்பாட்டை இழந்த நிலையில் இவ்வாறான வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. பொலிஸாரும் இது குறித்து அவதானத்துடன் இருக்கின்றார்களா என்பதும் இப்போது கேள்விக்குறியாகி உள்ளது. எனவே அரசாங்கம் இது குறித்து கடுமையான சட்டங்களை கொண்டு வந்து பொதுமக்களின் உயிரோடு விளையாடும் சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் உணரப்படுகிறது. நாளாந்தம் ஊடகங்கள் விபத்துகள் பற்றியே அறிக்கையிடுகின்றன. இந்த நிலைக்கு முற்றுப்புள்ளி இடவேண்டும். போக்குவரத்து அமைச்சர் மட்டுமன்றி அரசாங்கமும் இது தொடர்பாக விரிவாக கலந்துரையாடி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை தாமதம் இன்றி அமுல்படுத்த வேண்டும். சில நேரங்களில் சில பஸ்களில் சாரதிகள் சண்டாளர்கள் போன்று நடந்து கொள்கின்றனர். அங்கே பயணிகள் மௌனியாகின்ற நிலைமைகள் ஏற்படுகின்றது. தொடர்ந்து நடந்து வருகின்ற இவ்வாறான கவனயீனமான விபத்துகளை தடுக்க, பஸ்களில் பயணிப்போர் தமக்கான பொறுப்புகள் என்ன என்பது பற்றி அறியாதவர்களாக இருக்கின்றனர்.

ஒரு விபத்து நடந்ததும் அதன் பின்னரான ஒரு சில நாட்களுக்கே போக்குவரத்து துறை மற்றும் பொலிஸார் சில நடவடிக்கைகளை எடுக்கின்ற போதிலும் தொடர்ந்து அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படாததன் காரணமாகவே விபத்துக்கள் ஒரு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. காலையில் வீட்டை விட்டு வெளியேறியவர் திரும்பி வீட்டுக்கு வருவாரா என்ற சந்தேகம் இன்று ஒவ்வொரு குடும்பத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கம் போக்குவரத்து அமைச்சு இது தொடர்பாக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தாமதித்தால் வருங்காலத்தில். பயணிகள் பெரும் சிக்கலை எதிர்கொள்வர். எனவே, மக்களின் வாழ்க்கையோடு விளையாடுகின்ற சாரதிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. இவ்வாறான சாரதிகளை பரிசோதிப்பதும் அவர்களுக்கான எச்சரிக்கைகளை வழங்குவதும் பொலிஸாரினதும், போக்குவரத்து அதிகாரிகளினதும் கடமையாகும். மல்லியப்பு வில் விபத்தை ஏற்படுத்திய பஸ் பற்றி பல மோசமான தகவல்கள் இப்போது வெளியிடப்படுகின்றன. இதுவரை காலமும் இதற்கு பொறுப்பானவர்கள் இந்த பஸ் வண்டியை பற்றி அவதானம் செலுத்தாது ஏன் என்பது பற்றி கேள்விகள் எழுப்பப்படுகின்றன. அந்த பஸ்ஸில் பயணித்தவர்கள் பல சிரமங்களை அந்த பஸ் வண்டியினுள் எதிர்நோக்கியுள்ளனர். பொதுப் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் பஸ் வண்டிக்கான கட்டுப்பாடுகள் இருந்த போதிலும் அது ஒரு போதும் சரியான முறையில் பரிசோதிக்கப்படவில்லை. உற்சவ காலங்களில் வீதியில் வேகமாக வாகனங்களை செலுத்துவோருக்கு எதிராக அரசாங்கம் சில நடவடிக்கைகள் எடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது. இது தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும். இதனால் பொது மக்களுக்கு சில அசௌகரியங்கள் ஏற்பட்டாலும் இவ்வாறான வீதி விபத்துக்களை தடுக்கும் நோக்கத்தோடு மக்கள் அரச சட்டங்களுக்களை நடைமுறைப்படுத்த ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறான வீதி விபத்துக்களை தடுக்க வேறு என்னென்ன வழிவகைகள் சாத்தியப்பாடுகள் உள்ளன என்பது பற்றி புதிதாக தேர்வு செய்யப்பட்ட போக்குவரத்து அமைச்சர் மற்றும் போக்குவரத்து அமைச்சு கரிசனை செலுத்துவது காலத்தின் கட்டாயத் தேவையாக உள்ளது.

# தன்னிச்சையான இடமாற்றங்கள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தி அவதானம்

## ஆராய்வதற்கு விஷேட பிரிவும் அமைப்பு!




அரசாங்க மட்டத்திலும், மாகாண சபை மட்டத்திலும் இடம்பெறும் தன்னிச்சையான இடமாற்றங்கள் தொடர்பில் ஆராய விசேட பிரிவொன்றை நிறுவுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்காகஇபெயர் குறிப்பிட்டு அல்லது குறிப்பிடாது தகவல்களை வழங்கு அனைவருக்கும் வாய்ப்புகள் வழங்கப்படும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அரசாங்க மற்றும் மாகாண சபை மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து தன்னிச்சையான இடமாற்றங்களையும் இடைநிறுத்துமாறு அரசாங்கத்திடமும் மாகாண சபை அதிகாரிகளிடமும் வலியுறுத்துகிறோம் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த அறிக்கையில்,

“அரசாங்க மற்றும் மாகாண சபைகளின் பல பகுதிகளில் பணியாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமற்ற அடிப்படையில் சேவை பதவிகளை மாற்றுவதற்கான திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத் தப்படுவதைக் காணமுடிகிறது.

இதனால் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், உள்ளூராட்சி செயலாளர்கள், கூட்டுறவு உதவி அபிவிருத்தி ஆணையாளர் போன்ற ஊழியர்கள் மற்றும் கள உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச சேவையின் சுதந்திரத்தை நிலைநாட்டுவோம் என வாக்குறுதியளித்து பதவிக்கு வந்த அரசாங்கம் இவ்வாறு செயற்படுவது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

இன்னும் முடிவடையாத, விரைவில் நடைபெற உள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் இந்த நாட்களில் கூட்டுறவு சங்க தேர்தலும் நடைபெறவுள்ளது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் அரச சேவையில் துரித அரசியல் மயமாக்கல் இடம்பெற்று வருவதும், எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு அரசாங்கம் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதையும் தெளிவாக காண முடிகிறது.

இந்த இடமாற்றங்களில், அந்தந்த துறைகளில் பணியாற்றும் பணிகளில் சிக்கல் நிலை ஏற்படுவது மட்டுமின்றி, அதிகாரிகளும் தனிப்பட்ட ரீதியில் பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டியுள்ளதாக தெரிகிறது.“ என குறிப்பிடப்பட்டுள்ளது.



# ஒரு சமூகத்தின் நிலைபேறான அபிவிருத்தி கல்வியில் தான் தங்கியுள்ளது

**ஜாமியா நளீமிய்யா கலாபீட பணிப்பாளர் ஏ.ஸீ.அகார் முஹம்மத்**







**( பீ.எம் முக்தார்)**

ஒரு சமூகத்தின் நிலைபேறான அபிவிருத்தி கல்வியில் தான் தங்கியுள்ளது. அத்துடன் சமூகத்தின் உயர்வுக்கும், மேம்பாட்டுக்கும் கல்விச் செல்வமே மிகவும் இன்றியமையாத சொத்தாகும். கல்வி இல்லாத சமூகத்தால் இன்றைய உலக சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாது. அந்த வகையில் இங்கு இடம் பெறும் கல்வியலாளரை கௌரவிக்கும் நிகழ்வானது, மிகவும் வரவேற்கத்தக்க ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும் என்று ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தின் முதல்வர் அஷ்ஷெய்ஹ். ஏ.ஸீ அகார் முஹம்மத் (நளீமி) கூறினார்.

சீனன்கோட்டை ஜாமியா நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளரும், பேருவளை மண்ணின் மைந்தருமான அஷ்ஷெய்ஹ். கலாநிதி. அரபாத் கரீம் (நளீமி)க்கு மலேசியா இஸ்லாமிய சர்வகலாசாலை அண்மையில் இஸ்லாமிய சட்டத்துறைக்கான கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்தது.

மேற்படி, பட்டம் பெற்ற அரபாத் கரீமை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பேருவளை, சீனன்கோட்டை ஜாமியத்துல் மனாரத் எனும் மகளிர் அமைப்பு, நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி பாக்கிர் மாக்கார் மண்டபத்தில் நடாத்தியது.

அகார் முஹம்மத் தொடர்ந்து கூறியதாவது,

இன்று கல்வியாளர்கள், புத்திஜீவிகள் கௌரவிக்கப்படுவது, பாராட்டப்படுவது மிகமிக அரிதான நிகழ்வாக உள்ளது. பதிலுக்கு விளையாட்டு வீரர்கள், நடிகர்கள், பாடகர்கள், தனவந்தர்கள் சர்வசாதாரணமாக பாராட்டி கௌரவிக்கப்படுகிறார்கள். குறிப்பாக அரசியல்வாதிகள் மிகவும் பலமாக பாராட்டப்படுவதைக் காண்கிறோம். ஆனால், கல்வித்துறையில் உயர் பட்டம், பதவிகள் பெறுவோர் எமது மக்களால் கண்டு கொள்ளப்படுவதில்லை.

இந்த பாராட்டு விழாவுக்கு பிரதம அதிதியாக என்னை அழைக்கப்பட்ட போது, இது ஒரு முக்கியமான காத்திரமாக, தார்மீக கடப்பாடுடைய பணி என்பதால் குறுகிய கால அவகாசத்திலும் உடன்பாடு தெரிவித்து இன்று கலந்து கொண்டேன்.

பேருவளை மண் மாணிக்கக் கல் வர்த்தகத்திற்கு பேரும், புகழும் பெற்றுள்ளது போல் கல்விக்கும் உயிர் கொடுக்கும் ஒரு பிரதேசமாக இன்று விளங்குவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

கல்வி அறிவுதான் ஒரு மனிதனை தூய்மைப்படுத்துகிறது. கற்றவனிடம் ஆறு சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன. விவேகம், மேலும் அறிவைத் தேடும் ஆர்வம், விடா முயற்சி, நல்லாசானின் வழிகாட்டல், வாழ்வாதாரம், நீண்ட கால உழைப்பு. இவை எல்லாம் இன்று கௌரவிக்கப்படும் அரபாத் கரீமிடம் காணப்படுவதை நான் 4-5 தசாப்தங்களாக அவருடன் நெருங்கிப் பழகுபவன் என்பதனால் கண்டு கொண்டுள்ளேன்.

இந்த விழா எதிர்கால எமது சந்ததிகளின் உயர்வுக்கும், விழிப்புணர்வுக்கும் கால் கோளாக அமையும் என்பதில் ஐயமில்லை என்றார்.

மேற்படி, மகளிர் அமைப்பின் தலைவி பஸ்லா ஸினான் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சீனன்கோட்டை பள்ளிச் சங்க தலைவர் ஏ.எச்.எம் முக்தார் ஹாஜியார், அதிபர் பஹீமா பாயிஸ் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்ததுடன், கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.எம் ஸெய்னுலாப்தீன் (பஹ்ஜி), சீனன்கோட்டை பள்ளிச் சங்க உப தலைவர் அஷ்ஷெய்ஹ். எம்.எஸ். எம் றிழ்வான் (நளீமி), இணைச் செயலாளர் எம்.எம்.எம் சிஹாப் ஹாஜியார் மற்றும் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# கற்பிட்டி ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரியின் பழைய மாணவர் கூட்டமும் புதிய நிர்வாக குழு தெரிவும்

**(எம்.எச்.எம்.சியாஜ், றிஸ்வி ஹுசைன், எம்.யூ.எம்.சனூன்)**

கற்பிட்டி ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரியின் பழைய மாணவர் கூட்டமும் புதிய நிர்வாக குழு தெரிவும் பள்ளிவாசல்துறை தாருல் ஹிக்மா அஹதிய்யா பாடசாலையின் அதிபரும் வூடேப்ட் நிறுவனத்தின் முகாமையாளருமான மௌலவி எஸ்.என்.எம் நழீம் ( றஹ்மானி) தலைமையில் றஹ்மானிய்யா அரபுக் கல்லூரியில் இடம்பெற்றது.

அதன்படி புதிய நிர்வாகக் குழுவின் தலைவராக பள்ளிவாசல்துறை தாருல் ஹிக்மா அஹதிய்யா பாடசாலையின் அதிபரும் வூடேப்ட் நிறுவனத்தின் முகாமையாளருமான மௌலவி எஸ்.என்.எம்.நழீம் (ரஹ்மானி) , செயலாளராக பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் மௌலவி எம்.எம்.ஏ. ரஷீத் (ரஹ்மானி), பொருளாளராக தொழிலதிபர் மௌலவி எம்.ஐ. பஷீர் அலி (ரஹ்மானி), உப தலைவராக திகழி, ஏத்தாளை மற்றும் கொளனி பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் மௌலவி எம்.பி.எம்.முஸாதிக் (ரஹ்மானி), உப செயலாளர் புத்தளம் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் உளவள ஆலோசகரும், நிர்வாகக் கட்டமைப்பு அதிகாரியுமான மௌலவி எம்.எஸ். எம்.நஸ்ருதீன் (ரஹ்மானி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்தோடு கௌரவ நிர்வாக உறுப்பினர்களாக கற்பிட்டி முஹைதீன் ஜும்முஆப் பள்ளிவாசல் இமாம் மௌலவி எம்.ஐ.எம். சாலிஹீன் (ரஹ்மானி), கட்டுநாயக்க சர்வதேச பண்டாரநாயக்க விமான நிலையத்தின் சவூதியா அதிகாரி மௌலவி எஸ்.எச்.எம். ஜனீர் (ரஹ்மானி), கற்பிட்டி பஸார் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் மௌலவி எம்.எச்.எம். நுஸ்ரத் அலி (ரஹ்மானி) புத்தளம் காசிமிய்யா அரபுக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் மௌலவி எம்.ரீ. றொஷான் (ரஹ்மானி),



கற்பிட்டி தில்லையடி தாருல் அர்க்கம் மஸ்ஜித் பேஷ் இமாம் மௌலவி எம்.ரீ.ரிப்கான் (ரஹ்மானி), கற்பிட்டி மஸ்ஜிதுல் புர்கான் பள்ளிவாசல் பேஷ் இமாமும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் கற்பிட்டி கிளை செயலாளருமான மௌலவி எம்.எஸ்.எம்.மிக்தாத் (ரஹ்மானி), அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் அனுராதபுரம் கிளையின் நிர்வாக உறுப்பினர் மௌலவி எ.மாலிக் (ரஹ்மானி), கற்பிட்டி ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரியின் முகாமையாளர் மௌலவி எம்.எச்.எம்.சில்பான் (ரஹ்மானி),

கற்பிட்டி மண்டலக்குடா மஸ்ஜிதுர் ரஹ்மான் ஜும்ஆ பள்ளிவாசல் இமாம் மௌலவி எம்.எஸ்.ஏ.ஹாலிக் (ரஹ்மானி), கற்பிட்டி ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரியின் பகுதி நேர ஆசிரியர் மௌலவி எம்.ரீ.எம்.பௌஸ் (ரஹ்மானி) கௌரவ போஷகர்கள்.

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் மௌலவி எம். சீ.எம்.இப்றாஹீம் (ரஹ்மானி), கற்பிட்டி ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரியின் பணிப்பாளர் மௌலவி எம்.ஐ.எம். இபாததுல்லாஹ் (ரஹ்மானி), கௌரவ ஆலோசகர்கள்.

இலங்கையின் குவைத் தூதரக அதிகாரி மௌலவி எம்.சீ.ஏ. முத்தலிப் (ரஹ்மானி), குரிகொட்டுவ சுலைமானிய்யா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் மௌலவி ஐ.எல்.எம். நிஸாபுதீன் (ரஹ்மானி), கற்பிட்டி முதலைப்பாளி காஷிபுல் ஹுதா அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி ஏ.டப்லியூ.எம்.ஜமீல்ஹான் (ரஹ்மானி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# தொழிலாளர் தட்டுப்பாட்டால்தேயிலை தொழிற்துறை முடங்கும் ஆபத்து

**(ஏ.ஏ.எம்.பாயிஸ்)**

இரத்தினபுரி மாவட்ட தேயிலை தோட்டங்களில் தொழிலாளர் த ட்டுப்பாடு நிலவுவதால் பல்வேறு நெருக்கடிகளுக்கு தாம் முகங்கொடுத்து வருவதாக இப்ப குதித் தோட்ட உரிமையாளர்க ள் முகாமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தேயிலைத் தோட்டங்களைத் துப்பரவு செய்தல் கொழுந்து பறி த்தல் காண் வெட்டுதல் உட்பட பல வேலைகள் தேவை தோட்ட ங்களில் இடம் பெற வேண்டியு ள்ள நிலையில் தொழிலாளர் தட்டுப்பாடுத் துறையில் பெரு ந்தாக்கத்தை ஏற்படுத்தி வருவ தாகவும் இவர்கள் தெரிவிக்கி ன்றனர்.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் தோட்டத்துறை சிறப்பாக இயங்கி வந்தபோதிலும் அன்று பணியாற்றியவர்கள் முதுமை அடைதல் இவர்களின் பிள்ளைகள் தொழில் வாய்ப்பு பெற்றுச் செ ல்லல் சிலர் வெளிநாடுகளுக்கு செல்லல் இளம்பராயத்தினர் தோட்ட வேலைகளில் ஈடுபட விரும்பாமை போன்ற காரணிகள் இத்தட்டுப்பாடு ஏற்பட பிர தான காரணம் என இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும் தோட்ட நிர்வாகங்கள் தோட்ட தொழிலாளர்களுக்குரிய நியாயமான ஊதியத்தை வழங்காமை உட்பட தோட்டகம் பனிகளின் அடக்குமுறை புறக்கணிப்புகள் இதற்கான பிரதான காரணம் என தொழிற்சங்க பிரதிநிதிகள் தெரிவிக்கின்ற னர் இந்நிலைமையை தொடர்ந்தால் எதிர்காலத்தில் தேயி லைத் தொழிற்துறை முழுமை யாக முடங்கும் நிலை ஏற்படும் என இரு தரப்பினர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

# நத்தார் தினத்தின் உண்மையான அர்த்தத்தை புரிந்துகொள்வோம் நாட்டுக்காக அனைவரும் ஒன்றிணைவோம்

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச**



இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவூட்டும் அமைதி மற்றும் அன்பின் அடையாளமாக புனித நத்தார் பண்டிகை உதயமாகியுள்ளது. இறைவனின் அன்பும் மனித கௌரவமும் மனிதநேயம் சார்ந்த சமூகத்திற்கு நம்பகமான அடித்தளத்தை அமைத்தது.

அன்று இயேசு நாதர் போதித்த அமைதி, அன்பு, கருணை, சகவாழ்வு, இரக்கம் ஆகியவை இன்றைய நமது சமூகத்தை நாகரீகமாக்க போதுமானதாக இருந்தது.

அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவத்தை மையப்படுத்திய நத்தார் பண்டிகை கிறிஸ்தவர்களின் மத விழா மட்டுமல்ல, உலகெங்கிலும் வாழும் அனைத்து இனம், மதம், கட்சி, நிறம், இளையோர், முதியோர் என பாகுபாடின்றி கொண்டாடப்படும் கலாச்சார விழாவாகவும் உள்ளது. இதன் அர்த்தத்தை சரியாக புரிந்துகொண்டு நாமும் ஒரு நாடாக முன்னேற வேண்டிய நேரம் வந்துள்ளது. இந்த தருணத்தில் நமது நாடு எதிர்கொள்ளும் வங்குரோத்து நிலையிலிருந்து மீள வேண்டுமெனில் நாமும் இனம், மதம், வர்க்கம், கட்சி பேதமின்றி அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன், நல்லிணக்கத்துடன், அன்புடன் செயல்பட வேண்டும்.

இது நாட்டின் மற்றும் மக்களின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமையும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அப்போது அடுத்த நத்தார் தினத்தைக் கொண்டாடும் வேளையில் ஒவ்வொரு வீட்டிலும் எதிர்பார்ப்பு விளக்குகளுக்கு பதிலாக முன்னேற்றத்தின் விளக்குகள் ஒளிரும். இலங்கை வாழ் அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் மகிழ்ச்சியான இனிய நத்தார் வாழ்த்துக்களை மனமார வாழ்த்துகிறேன்.

# கொடூரமான அரக்கத்தனத்தை கண்டு



# உலகம் ஏன் வெட்கி தலை குனிய மறுக்கிறது!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

இஸ்ரேல் என்னும் கொடூரமான அரக்கன் காசாவில் 46,000 பேரை படுகொலை செய்து விட்டு அதன் அடுத்த கொடூரமான முகத்தை டாமாஸ்கஸ் நகரை நோக்கி சென்று கொண்டு இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

இந்த செயல்பாடு முஸ்லிம் உலகின் மிகப்பெரிய அளவில் ஆன அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஈரானின் கட்டுப்பாட்டில் செயல்படும் ஹிஸ்புல்லாஹ் ஹொதீக்கள் மற்றும் இஸ்லாமிய கூட்டு படைகள் அனைத்தையும் பின்னடைவை சந்திக்கச் செல்லும் வகையில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்க கூட்டு படைகள் இந்த நடவடிக்கையை தொடருவதாக பலரும் தங்கள் பார்வையை எடுத்து வைத்துள்ள நிலையில் இஸ்ரேல் அரசு இதனைப் பற்றி எல்லா எந்த வகையிலும் கவலைப்படுவதில்லை என்பதை தாண்டி தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதைக் காணலாம்.

ஈரான் இது குறித்து தனது கவலையை பகிர்ந்து கொள்ளும் வகையில் இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற நிலையிலும் இது குறித்தான கவலை யாரிடமும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

காசாவில் பொதுமக்களை முழுமையாகக் கொலை செய்து அழித்து விட்டு அதாவது ராஜ்ஜியத்தை முழுமையாக தனதாக்கிக் கொள்ள தனது திட்டத்தை அவர்கள் முன்னெடுத்துச் செல்வதில் எந்தவொரு தடையும் இருப்பதாக தெரியவில்லை.

இந்த நிலையில் இஸ்ரேலிய ராணுவத்தின் 242 படை பிரிவின் பெயர் வெளியிட விரும்பாத யூதர் ஒருவர் அதிர்ச்சி தரும் வகையில் ஒரு தகவலை தெரிவித்துள்ளது சர்வதேச நாடுகளை அதிர்ச்சி அடையும் வகையில் அமைந்துள்ளது என்பதே அந்த செய்தியாக உள்ளது. அதாவது இஸ்ரேலிய ராணுவத்தின் தலைமை தனது வீரர்கள் காசாவில் நுழையும் யாரையும் சுட்டு படுகொலை செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளது தற்போதைய நிலையில் வெளிஉலகிற்கு வந்துள்ளது. ஆகவே இந்த படுகொலை சம்பவத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் கூட தயவு தாட்சனை இல்லாமல் படுகொலை செய்து வரும் நிலையில் உலகின் பல்வேறு நாடுகள் இதனை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருப்பதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக உள்ளது.

இஸ்ரேலிய யூத சியோனிச ராணுவ தலைமை உத்தரவின் படி காசாவில் பொதுமக்களை சுட்டு கொலை செய்து அவர்களது உடல்களை நாய்களுக்கு இரையாக்கி வருவதும் தற்போது உலகையே அதிர்ச்சி அடைய செய்துள்ளது.

இந்த நிலையில் வரும் கிறிஸ்துமஸ் பண்டிகை முன்பே அதாவது டிசம்பர் 25 திகதிக்கு முன்பே அமைதி ஒப்பந்தம் கையெழுத்து இடும் வகையில் அமெரிக்கா பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருவதாகவும் அது இறுதி கட்டத்தை அடைந்து வருவதாக கூறப்படுகிறது.இந்த அமைதி பேச்சை இறுதி கட்டத்தை அடைந்து வருவதாக இஸ்ரேலிய ராணுவ துறை அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் ஒப்புக் கொண்டுள்ளதை கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது.

இந்த பேச்சுவார்த்தையில் அமெரிக்கா நட்பு நாடுகளாக இருந்து வரும் எகிப்து மற்றும் கத்தார் தீவிரமாக பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் பொருட்டு அமெரிக்கா இன்டெலிஜன் சி ஐ ஏ இயக்குனர் வில்லியம்ஸ் சி அங்கு விரைந்துள்ளதை நாம் காண முடிகிறது. அதாவது ஹமாஸ் இயக்கத்தின் சார்பில் கலீல் ஹயா இதில் கலந்து கொண்டு வருவதாக தெரிய வந்துள்ளது. அமெரிக்க உளவுத்துறை தலைவர் மற்றும் இஸ்ரேலிய ராணுவ துறை சார்ந்த ஆளுமைகள் தீவிர கவனம் செலுத்தி வருவதைக் நாம் காணலாம்.

இதற்கிடையில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் உள்ள கோலன் குன்றுகளில் குடியேற்றங்களை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது இஸ்ரேல் அரசு.இஸ்லாமிய கிளர்ச்சிக் குழுவான HTS சிரியாவில் பஷர் அல் அசத்தின் ஆட்சியை வீழ்த்திய பிறகு, இஸ்ரேலுடனான சிரியாவின் எல்லையில் ஒரு "புதிய அமைப்பு " உருவாகியுள்ளதால் இந்த நடவடிக்கை முக்கியமான ஒன்று என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டார். அதாவது தான் எந்தவொரு எல்லைக்கும் செல்வேன் என்பதே அவரின் பேச்சின் சாராம்சமாக அமைந்துள்ளது.

இஸ்ரேலிய ராணுவம் 1967-ஆம் ஆண்டு அரபு நாடுகளுக்கு எதிராக நடைபெற்ற 6 நாட்கள் போருக்கு பிறகு கோலன் குன்றுகளை கைப்பற்றியது . இஸ்ரேல் கோலன் குன்றுகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ளது என சர்வதேச சட்டப்படி கருதப்படுகிறது. அங்கு தற்போது உள்ள மக்கள் தொகையை இரட்டிப்பாக்க வேண்டும் என்று நெதன்யாகு கூறியுள்ளார். அதாவது கோலன் குன்றுகளில் யூத குடியேற்றத்தை அதிகரிப்பதே இஸ்ரேலின் திட்டமாக இருந்து வருகிறது.அதாவது சிரிய தலைநகர் டமாஸ்கஸில் கட்டுப்பாடுகள் மாறியுள்ளதால் போர்நிறுத்த நடவடிக்கைகள் சீர் குலைந்துவிட்டன என்று கூறி இஸ்ரேலிய ராணுவம் கூறி வருகிறது.அதே நேரத்தில் தனது நாட்டின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு அமைப்பையும் தம்மால் சகித்து கொள்ள முடியாது என்று பெஞ்சமின் நிதான்யாகு கூறி வருகிறார்."

அதே சமயம் சிரியா தொடர்பான இஸ்ரேலிய கொள்கையை நாங்கள் கள நிலவரத்திற்கு ஏற்ப தீர்மானிப்போம்," என்று பெஞ்சமின் நிதான்யாகு கூறினார்..சர்வதேச சட்டங்களின் படி, அவர்கள் சட்டத்திற்கு புறம்பாக குடியேறியவர்களாக அறியப்படுகின்றனர். ஆனால் இஸ்ரேல் அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது.இந்த பகுதியில் 20 ஆயிரம் சிரியா மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் ட்ரூஸ் அரேபியர்கள் ஆவார்கள். இஸ்ரேலின் கட்டுப்பாட்டிற்கு அந்த பகுதி வந்த பிறகு அங்கிருந்து செல்லாதவர்கள் ட்ரூஸ் அரேபியர்கள். நெதன்யாகு அந்த பகுதியை இஸ்ரேல் தன்னுடைய கட்டுப்பாட்டில் தொடர்ந்து வைத்திருக்கும் என்றும் அந்த பகுதியை வளமாக மாற்றி அங்கே குடியேற்றங்களை உருவாக்கும் என்றும் யூத சியோனிச ராணுவ தலைமை கூறி வருகிறது.

சிரியாவின் புதிய தலைவராக கருதப்படும் அபு முகமது அல் ஜொலானி (அஹமது அல்-ஷரா), இஸ்ரேல் சிரியா நாட்டின் ராணுவ தளங்கள் மீது தாக்குதல் நடத்துவது தொடர்பாக விமர்சனம் செய்தார். இதற்கு ஒரு நாள் கழித்து நெதன்யாகுவின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.இஸ்ரேலிய ராணுவ தாக்குதல்கள் சிவப்பு கோட்டை மீறிவிட்டது என்று அபு முஹம்மது அல் ஜோலானி தெரிவித்தார். மேலும் இஸ்ரேல் நடவடிக்கைகள் பிராந்தியத்தில் நிலவும் பதற்றத்தை அதிகரிக்கிறது என்றும் கூறினார்.

மேலும் சிரியா எந்த அண்டை நாட்டினருடனும் மோதலில் ஈடுபட விருப்பமில்லை என்று தெரிவித்தார்.

சிரியா தொலைக்காட்சி பேசிய உவுளு தலைவர் அபூ முஹம்மது அல் ஜீலானி தொடர்ச்சியான கிளர்ச்சி மற்றும் போரால் துவண்டு போன சிரியா புதிய பிரச்னைகளை அனுமதிக்காது என்று அவர் கூறினார். அபூ முஹம்மது அல் ஜீலானி யின் கருத்தை செவிமடுத்த இஸ்ரேல் பாதுகாப்பு படையின் இராணுவ தலைமை இது குறித்து எந்த கருத்தையும் இதுவரை தெரிவிக்கவில்லை. ஆனால் இதற்கு முன்பு, "ஆயுதங்கள் பயங்கரவாதிகளின் கைகளுக்கு சென்றுவிடுவதை தடுக்க இந்த தாக்குதல்கள் தேவையானது"" என்று அவர்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர். டமாஸ்கஸ் மீது ஹயத் தஹ்ரிர் அல்-ஷாம் கிளர்ச்சிக்குழுவின் சில பிரிவினர் தாக்குதல் நடத்த துவங்கிய பிறகு, சிரியா அதிபர் பஷர் அல் அசத் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் ரஷ்யாவில் தஞ்சம் புகுந்தனர்.இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் முயற்சியில், சிரியா கிளர்ச்சிக் குழுக்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

கடந்த வாரம் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஆண்டனி ப்ளிங்கன் ஹயத் தஹ்ரிர் அல்-ஷாம் கிளர்ச்சி குழுவோடு அமெரிக்கா பேசியதாக குறிப்பிட்டார். ஹயத் தஹ்ரிர் அல்-ஷாம் (HTS) கிளர்ச்சிக் குழுவை அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் பலவும் பயங்கரவாத அமைப்பாக குறிப்பிடுகின்றன. அதாவது உவுளு தலைவர் அல் கொய்த அமைப்பில் இணைந்து தீவிரமாகச் செயல்பட்டு கொண்டு இருந்த நிலையில் தான் அமெரிக்கா அரசு இவரது தலைக்கு 10 மில்லியன் அமெரிக்க டாலர்களை அறிவிப்பு செய்தது. தற்போதைய நிலையில் அமெரிக்கா அரசு அபூ முஹம்மது அல் ஜோலானியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதைக் காண கூடியதாக இருக்கிறது. ஆனால் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை சர்வதேச சமூகத்திற்கு விந்தையான ஒன்றாகவே உள்ளது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்பதை நாம் இங்கே சுட்டி காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிரியா தூதர் கெய்ர் பெடெர்சென் ஞாயிற்றுக் கிழமை அன்று, சிரியாவில் பொருளாதார நிலைமைகள் சீரடைய, ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் தடைகள் நீக்கப்படும் என்றும் பொருளாதார தடைகளுக்கு ஒரு முடிவு வரும் என்று நாங்கள் நம்புகிறோம். அதன் பிறகு தான் சிரியாவை மீண்டும் கட்டமைக்க முடியும்," என்று டமாஸ்கஸ் வந்த அவர் கூறினார்.

இதற்கிடையில் துருக்கியின் பாதுகாப்பு அமைச்சர் யசர் குலெர், சிரியாவின் புதிய அரசுக்கு தேவையான ராணுவ உதவிகளை செய்ய துருக்கி தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

"புதிய நிர்வாகம் என்ன செய்யும் என்பதைப் பார்க்க வேண்டியது அவசியம். அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுப்பது முக்கியம் என்று நாங்கள் நினைக்கிறோம்," என்று துருக்கியின் கருத்தாக இருக்கிறது..

இதனிடையே காசா மற்றும் சிரியாவில் அத்துமீறி நுழைந்து பொதுமக்களை தொடர்ந்து படுகொலை செய்து வரும் இஸ்ரேலிய ராணுவம் அதன் செயல்பாடுகள் எல்லை மீறி செல்லும் வகையில் அமைந்துள்ளது.

சர்வதேச நாடுகள் இதனை கண்டும் காணாமல் சென்று கொண்டு இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது. உலகம் நாகரீகமான சமூகம் தானா என்கிற கேள்விக்கு இதுவரை எந்தவொரு நிலையிலும் பதில் இல்லை என்பதே நிதர்சனமான உண்மை..

பாலஸ்தீன பிரதேசம் அந்த மக்களின் சொந்தமான நிலம் என்பதை நாம் யாரும் எந்தவொரு நிலையிலும் மறுக்க முடியாது. 1918 ம் ஆண்டுகளில் உஸ்மானிய பேரரசு வீழ்ந்த பிறகு இந்த சதி திட்டம் தீட்டப்பட்டது.

1948 ம் ஆண்டுகளில் இஸ்ரேலிய நாடு சுதந்திரம் அடைந்ததாக அறிவிப்பு செய்யப்பட்ட நிலையில் பெரும்பாலான நிலங்களை அமெரிக்கா மற்றும் பிரித்தானிய கூட்டணி அரசுகளிடம் இருந்து பிடுங்கி நியாயமற்ற முறையில் அதனை யூதர்களுக்கு வழங்கியதை வரலாறு எப்படி மறுக்க முடியும் என்பதை குறித்து யாரும் பேச முன்வராத நிலையில் தங்களிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலத்தை மீட்டு செய்ய போராடும் போராளிகளை அவர்களின் சொந்த மக்களை படுகொலை செய்தும் ஏராளமான அப்பாவி பொதுமக்களை கைது செய்து சிறையில் பல ஆண்டுகளாக அடைந்து வைத்தும், பல்லாயிரக்கணக்கான பொதுமக்களை படுகொலை செய்தும், 1,10000 பொதுமக்கள் ஊனமுற்ற நிலையில் படுகாயம் அடைந்த நிலையில் இந்த மக்களுக்கு நியாயம் தான் என்ன?

நிச்சயமாக இந்த அநீதிக்கு தீர்வை இந்த உலகத்தில் வாழும் மக்களிடம் இருந்து நாம் எதிர்பார்த்தால் அது எந்தவொரு நிலையிலும் சாத்தியக்கூறு இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

அப்படியென்றால் இந்த அநீதிக்கு தீர்வு தான் என்ன என்கிற கேள்விக்கு எந்தவொரு பதிலும் இது வரை இல்லை என்பதே உண்மையாகும். காலம் எல்லா வகையான அநீதிக்கும் தீர்வை தெளிவாக தந்து விடும் என்பதை யாரும் மறுக்க இயலாது. அதற்கான வழி என்பது பொறுமை மட்டுமே.

இதனைத் தவிர்த்து பாலஸ்தீன மக்களின் உரிமைகளை நிலைநாட்டும் பொருட்டு எந்தவொரு தீர்வும் இதுவரை இல்லை என்பதே நாம் எந்தவொரு நிலையிலும் மறுக்க முடியாது என்பதை நிதர்சனமான உண்மையாகும்...!



எம்.எஸ். அமீர் ஹுசைன்



# இந்திய, சீன ஆதிக்கத்தின் பிடி தளருமா இறுகுமா?

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காக 2024.12.15 ஆம் திகதி இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அவர் ஜனாதிபதியாகியவுடன் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டு விஜயம் இந்தியாவுக்கானது என்ற வகையில் பல கோணங்களில் இருந்து இந்த விஜயம் நோக்கப்படுகின்றது. ஏற்கனவே இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கி மீள முடியாமல் தவித்த சந்தர்ப்பத்தில் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் கடன் கொடுத்து கைகொடுத்த நாடு இந்தியாவாகும். அத்துடன் எப்படிப்பார்த்தாலும் இந்தியா இலங்கையின் முதலாவது அயல் நாடு என்ற வகையிலும் பல தேவைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் ஏற்கனவே பல தசாப்தங்களாக இலங்கையில் திருகோணமலை எண்ணெய் குதங்களின் பராமரிப்பு உட்பட பல துறைகளில் முதலீடுகளையும் மேற்கொண்டு வருகின்ற ஒரு நாடு என்ற வகையிலும் இந்தியா இலங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

இவ்வாறான விஜயங்களை கருத்தில் கொண்டே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காக அவரது ஏனைய அமைச்சர்கள் சிலர் உள்ளடங்களாக 10 பேர்களை கொண்ட தூதுக்குழுவுடன் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடி உட்பட உயர்மட்ட முதலீட்டாளர்கள் பலரையும் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தியதோடு இன்னும் சில விடயங்கள் தொடர்பாக உடன்படிக்கைகளையும் செய்து கொண்டுள்ளார். ஆனாலும் இன்றைய தேசிய மக்கள் சக்தியாக இருந்து வருகின்ற ஜே.வி.பி. ஒரு காலத்தில் இந்தியாவின் பரம எதிரியாக இருந்த ஒரு அரசியல் கட்சியாகும்.

அக்கட்சியின் கொள்கை இலங்கையில் இந்தியாவின் ஆதிக்கத்தை கடுமையாக எதிர்ப்பதாக இருந்தது. அக்காலப்பகுதியில் இலங்கையில் இந்திய பொருட்களைக் கூட பகிஷ்கரிக்க பகிரங்க அழைப்பு விடுத்து இந்திய எதிரியாக செயல்பட்டாலும் இன்று காலப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள், தேவைகள் காரணமாக அதே இந்தியாவை கைவிட முடியாத நிலைக்கு அநுர அரசாங்கம் மாறிவிட்டது என்பதற்கு அவரது இந்திய விஜயம் சான்றாக அமைகின்றது.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் பின்னணியில் என்ன இரகசியங்கள் உள்ளன என்பதே அரசியல் அரங்கில் எழுகின்ற பிரதான கேள்விகளாகும். முன்னைய ஆட்சி காலங்களில் ஜே.வி.பி. எதிரணியில் இருந்த காலப்பகுதியில் இந்தியாவின் நடவடிக்கைகள் பலவற்றிற்கு கடுமையான எதிர்ப்புக்களை தெரிவித்து வந்த ஜே.வி.பி. யின் பிரதான கொள்கையாகவும் கோரிக்கையாகவும் இருந்து வந்தது இலங்கை போன்ற இந்த சிறிய நாடு பிராந்திய வல்லரசான இந்தியாவின் பிடியில் சிக்கி அதன் வர்த்தக வாணிப ஏகாதிபத்திய அடிமையாக மாறவிடக்கூடாது என்பதாகும். அந்த வகையில் கடந்த காலங்களில் இந்தியா இலங்கையுடன் பல ஒப்பந்தங்களை செய்து கொண்டு படிப்படியாக இலங்கையின் உள் விவகாரங்களில் செல்வாக்கு செலுத்தும் அளவிற்கு ஆதிக்கமும் செல்வாக்கும் செலுத்தும் நிலை ஏற்பட்டிருப்பது தவிர்க்க முடியாததாகி இருக்கின்றது.

அதே நேரம் இலங்கை தொடர்பாக மறுபுரத்தில் இருந்து மேலாதிக்க ஆர்வத்தை செலுத்தி வருகின்ற நாடுகளில் சீனாவும் அமெரிக்காவும் பிரதான இடங்களை பெறுகின்றன. மஹிந்த ஆட்சி காலப்பகுதியில் அதிகமாக அக்கறை செலுத்திய இரு நாடுகள் என்றால் இந்தியாவுக்கு அடுத்தபடியாக சீனாவாகும். ஆனாலும் புதிய ஆட்சி மாற்றத்துடன் சீனா இலங்கையில் கால் ஊன்றுவதற்கு முன்னர் இந்தியா காலூன்ற வேண்டும் என்பது அந்நாட்டில் ஒரே திட்டமாகும். அதன் காரணமாகவே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா சீனாவுடன் நேசக் கரம் நீட்டுவதற்கு முன்னர் இந்திய விஜயம் இடம்பெற்றிருக்கின்றது.

எவ்வாறாயினும் இலங்கையில் மின் சக்தி எரிபொருள் துறையிலான இந்திய முதலீடுகள், திருகோணமலையில் அமைந்துள்ள 101 எண்ணெய் குதங்களில் 61 குதங்களை மறுசீரமைத்தல், இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையான எட்கா உடன்படிக்கை, அரசியல் அமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தமிழர் பிரச்சினைக்கான தீர்வாக அதிகாரப்பரவாலாக்கத்தை முழுமையாக அமுல்படுத்தல், இந்திய இலங்கை பிரயாணிகள் கப்பல் சேவைகளை மீண்டும் ஆரம்பித்தல், இலங்கையில் உள்ள 1500 அரச அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சியளித்தல், கூட்டு இராணுவ மற்றும் கடற்படை பயிற்சிகளை முன்னெடுத்தல், இந்திய நிதி உதவியுடனான வீடமைப்பு மற்றும் புகையிரத ஒத்துழைப்பு,

இருநாடுகளுக்கும் இடையிலான கடல் எல்லை, பாதுகாப்பு மற்றும் இலங்கைக்குள் அத்துமீறி பிரவேசிக்கும் மீனவர்களால் ஏற்படும் முரண்பாடுகள் உட்பட பல விடயங்கள் அயல் நாடான இந்தியாவுடன் இலங்கைக்கு இருந்து வரும் பலமான உறவின் அடிப்படையிலான சாதக மற்றும் பாதகமான விடயங்களாக உள்ளன.

இவ்விவகாரங்களில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா வின் இந்திய விஜயத்தில் எட்கா உடன்படிக்கை தொடர்பான கலந்துரையாடல்களை அவசரப்படுத்தி அது தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து உடன்படிக்கையில் கைச்சாத்திடல், தமிழர் பிரச்சினைக்கு தீர்வான 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான அதிகாரப் பங்கீட்டை உரிய முறையில் இலங்கை நிறைவேற்றச் செய்தல் போன்ற விடயங்களை விரைவுபடுத்துமாறு மோடி ஜனாதிபதி அநுர விடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆனாலும் அரசாங்கத்தின் நிலைப்பாடு எந்தக் காரணம் கொண்டும் எட்கா உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட மாட்டாது என்பதாகும். ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் அது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றதாகவும் அந்த கலந்துரையாடலில் எட்காவில் இலங்கை அரசாங்கம் கையொப்பம் இட்டால் அதனால் பலவிதமான பாதகமான விளைவுகள் இலங்கைக்கு ஏற்பட இடமிருக்கின்றன. அதனால் அந்த உடன்படிக்கை தொடர்பான எந்தவிதமான முன்நோக்கிய நகர்வுகளையும் அரசாங்கம் மேற்கொள்ளாது என்ற திட்டவட்டமான தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆனாலும் ஏனைய விவகாரங்களில் இலங்கைக்கு நன்மையாக அமையும் விடயங்களில் இலங்கை இந்தியாவுக்கு பொறுப்புக் கூறும் வகையில் ஒத்துழைப்பை வழங்க தயாராக இருக்கின்றது.

ஏனெனில் பிரதான விடயமாக அமைவது கடன் மீளமைப்பில் இந்தியா இலங்கைக்கு ஒத்துழைத்து வருவதால் இலங்கையும் இந்தியாவுக்கு தனது செஞ்சோற்றுக் கடனை நிறைவேற்றுவதற்காக ஒத்துழைக்க வேண்டி இருக்கின்றது. ஆனாலும் அதற்காக ஏற்கனவே இலங்கையில் மூக்கை நுழைத்து ஏகாதிபத்திய அதிகாரம் செலுத்தி வரும் அமெரிக்காவையும் சீனாவை யும் இலங்கை அரசாங்கம் பகைத்துக் கொள்ள மாட்டாது என்ற தகவல்களும் வெளியாகி இருக்கின்றன.

ஆதனால் ஜனாதிபதி இந்தியாவுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியவுடன் இலங்கைக்கு 2024.12.18 ஆம் திகதி விஜயம் செய்த சீனாவின் தூதுக் குழுவொன்றையும் சந்தித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. அந்த கலந்துரையாடல்களின் பின்னர் 2025 ஜனவரி இரண்டாம் வாரத்தில் சீனாவுக்கான விஜயத்தை மேற்கொள்வதற்கும் திட்டமிட்டுள்ளார் என்ற தகவல்களும் வெளியாகி இருக்கின்றன.

இலங்கையில் சீன முதலீட்டு ஒத்துழைப்புக்களை புதுப்பித்தல், கடன் மீளமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் என்று சீனாவுடனும் பேசுவதற்கு பல விடயங்கள் இருக்கின்றன.

எதுவானாலும் ஜே.வி.பி. யாக இருந்து பெயர் மாற்றம் பெற்றுள்ள தேசிய மக்கள் சக்தி அதன் சோசலிச சமூக உடமை வாத சிந்தனையில் எந்தவிதமான மாற்றங்களையும் அல்லது கொள்கை அடிப்படையிலான மாற்றங்களையும் கொண்டிருக்கும் என்று கருத முடியாது. அந்த வகையில் சீனாவும் இந்தியாவும் இந்த ஆசிய பிராந்தியத்தில் சோசலிச சமூக உடமைவாத கொள்கைகளை கடைபிடிக்கும் இரண்டு பிரதான பலம்பொருந்திய நாடுகளாகும். அதில் இந்தியா சோசலிசம் மற்றும் முதலாளித்துவம் சார்ந்த கொள்கையை கடைபிடித்தாலும் சீனா பூரணமாக சோசலிச கொள்கையில் நிலைத்து நிற்கும் ஒரு நாடாகும்.

அதனால் இந்த இரண்டு நாடுகளையும் பகைத்துக் கொண்டு இலங்கைக்கு அதன் ஸ்தீரத்தன்மையை உறுதி செய்து கொள்ள முடியாது. ஏதாவதொரு வகையில் இரண்டு நாடுகளதும் பிடிகள் இலங்கைக்குள் இருப்பதற்கு எப்படியும் அரசாங்கம் அனுசரணை வழங்கியாகத்தான் வேண்டும்.

அதே நேரம் இவ்விரு நாடுகளுக்கும் இலங்கை எல்லாவகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. இலங்கை அரசாங்கம் இந்த நாடுகளை கைவிட நினைத்தாலும் இந்த நாடுகள் இலங்கையை கைவிடப் போவதில்லை. குறிப்பாக இவர்களது உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை வழங்கும் பிரதான நாடாக இலங்கை இருந்து வருகின்றது. அத்துடன் முதலீடு என்ற விடயத்திலும் இந்த நாடுகளது பாரிய முதலீடுகளால் பெருத்த இலாபம் ஈட்டி வருவதால் இலங்கை எப்போதும் இந்தியா மற்றும் சீனாவின் பிடிக்குள் இருந்து விடுபட முடியாது. அதனால் மேலும் பிடி இறுகுமா அல்லது தளருமா ? எதிர்காலம் இலங்கைக்கு எவ்வாறு அமையப்போகின்றது என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# வட மத்திய மாகாணத்தில் தாதியர்களுக்கு பற்றாக்குறை

(எம்.ரீ. ஆரிப்)

வடமத்திய மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் சுமார் 150 கும் மேற்பட்ட தாதியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் சுமார் 07 தசாப்தங்களாக இந்நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் நோயாளிகளுக்கு வைத்தியசாலைகளில் தரமான சேவைகளை வழங்கும் வாய்ப்பை நாட்டுக்கு இல்லாமல் செய்துள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கத்தின் பிரதான செயலாளர் பி.எம்.எல்.வீரசூரிய தெரிவித்தார். வடமத்திய மாகாண அகில இலங்கை தாதியர் சங்கத்தினால் ஹிங்குராக்கொடை பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கும் போது :-

வடமத்திய மாகாணத்தில் இரண்டு வருடங்களுக்கும் மேலாக நிலவி வரும் இருதய கோளாறுகள் மற்றும் ஏனைய சுகாதார பிரச்சினைகள் தொடர்பில் வடமத்திய மாகாண சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் கடந்த அரசாங்கங்கள் எவையும் இப்பிரச்சினைக்கு தீர்வுகளை வழங்கவில்லை.இந்த விடயங்கள் தொடர்பில் வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாசவுடன் கலந்துரையாடியுள்ளோம். இந்த பிரச்சனைக்கு ஆளுனரிடம் இருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளது. இதன்படி மாகாண சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடி பிரச்சனைக்கு தீர்வுகளை வழங்குவதற்கு ஆளுநர் தீர்மானித்துள்ளார். ஆனால் மாகாண சுகாதார அதிகாரிகள் பின்தங்கி உள்ளார்கள். 2017 தொடக்கம் இந்த மாகாணத்தில் தாதியர்களுக்கான கடுமையான பற்றாக்குறை நிலவுகின்றது. இது குறித்து சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போது அவர்கள் 2017 ஆம் ஆண்டு சேவை நியமனங்களை வழங்கும் நடைமுறைக்கு அமைவாக அவர்கள் செயல்படுகின்றனர். ஆனால் அவ்வாறு செயல்படுவதால் இன்று மருத்துவமனைகளில் இதய நோய் உள்ளிட்ட சேவைகள் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த மாகாணத்தில் தரமான சேவையினை வழங்குவதாயின் 600 தாதியர்கள் நியமிக்கப்பட்ட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 50 காட்டு யானைகள் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு



(எம்.ரீ. ஆரிப்)

இவ்வருடம் இதுவரையிலான காலப்பகுதியில் சுமார் 50 காட்டு யானைகள் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாகவும். அந்த சந்தர்ப்பங்களில் அனுமதியின்றி இலங்கை மின்சார சபையின் மின்சார விநியோகம் பெறப்பட்டுள்ளதாகவும் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனுமதியின்றி மின்சாரம் எடுப்பதை தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும். இதற்கு பொது மக்களின் ஆதரவு எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1987 அல்லது 0112118767 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அனுமதியில்லாத மின் பாவனை தொடர்பில் தகவல்களை சபைக்கு அறிவிக்குமாறு இலங்கை மின்சார சபை பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# மாவனல்லை நூராணியாவில் Futsal blitz -2024





மாவனல்லை உயன்வத்தை நூராணியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சங்க, மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களின் ஏற்பாட்டில் Futsal blitz 2024(NOBA) எனும் தொனிப் பொருளில் உதைப்பந்தாட்டப் போட்டி நிகழ்ச்சி பல பிரிவுகளாக அக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.
பாடசாலை அதிபர் திரு எம்.ஆர். எம்.அக்ரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இப் போட்டி நிகழ்ச்சியில் இவ் வித்தியாலயத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் உள்நாடு மற்றும் வெளிநாட்டுகளில் இருந்து வந்து கலந்து சிறப்பித்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.
வெற்றிப் பெற்ற அணியினருக்கு இங்கு அதிதிகள் மூலம் கேடயங்களும் வழங்கப்பட்டன.

# கற்பிட்டி ஆபத்தொழி மஸ்ஜிதுல் றஹ்மான் பாலர் பாடசாலையின் வருடாந்த கலை விழா







(எம்.எச்.எம்.சியாஜ், றிஸ்வி ஹுசைன், எம்.யூ.எம்.சனூன்)

கற்பிட்டி ஆபத்தொழி மஸ்றஹ்மான் பாலர் பாடசாலையின் பத்தாவது வருடாந்த கலை விழா நிகழ்வுகள் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் பாலர் பாடசாலையின் தலைவர் எம்.ஏ.எம் இக்மால் தலைமையில் இடம்பெற்றது இந் நிகழ்வின் அதிதிகளாக கற்பிட்டி நகரின் ஏனைய பாலர் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர்.

பாலர் பாடசாலை மாணவர்களின் இஸ்லாமிய மற்றும் கலை ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் மஸ்ஜிதுல் றஹ்மான் பாலர் பாடசாலை ஆசிரியர்களான எம்.எஸ் சஜானஸ், எம்.ஐ.எப் சஹானா மற்றும் எம்.எஸ் றிப்னத் ஆகியோரின் முயற்சியினால் பெற்றோர்களின் பங்களிப்புடன் சிறப்பாக இடம்பெற்றதுடன் பங்கு பற்றிய சகல மாணவர்களுங்கும் பரிசுப் பொருட்கள், சான்றிதழ்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# லேக் ஹவுஸில் நடைபெற்ற இலக்கிய ஊடக ஆளுமைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு









(ஏ.எஸ்.எம். ஜாவித், அஷ்ரப் ஏ. சமத்)

தினகரன், தினமின, டெய்லி நியுஸ், மற்றும் காவேரிக் கலா மன்றம் என்பன இணைந்து நடாத்திய இலக்கிய ஊடக ஆளுமைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை (21) லேக் ஹவுஸ் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் திருமதி. சாவித்திரி போல்ராஜ் மற்றும் சிறப்பு விருந்தினராக தேசிய ஒருமைப்பாடுகள் மற்றும் தேசிய நல்லிணக்க பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

வரவேற்புரையை தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவரும், அறிமுக உரையை பேராசிரியர் துரை மனோகரனும் வழங்கியதுடன் அதிதிகளின் உரைகளும் இடம் பெற்றன.

இதன்போது தொழு நோய் தொடர்பான விழிப்புணர்வு உரையை வைத்தியர் டிலினி விஜயசேகர வழங்கியதுடன் காவேரிக் கலா மன்றம் தொடர்பான உரையை அதன் திட்டப் பணிப்பாளர் ஐ. சஹானாவும், அலியன்ஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் ரகு பாலச்சந்திரன் ஆகியோரும் வழங்கினார்.

நிகழ்வில் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஆசிரியர் பீட பணிப்பாளரும், சிரேஸ்ட ஊடகவியலாளருமான சிசிர யாப்பா, நிறுவனத்தின் பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல, ஹாசிம் உமர் பவுண்டேசின் ஸ்தாபகர் ஹாசிம் உமர் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது இலக்கிய ஊடக ஆளுமைகளுக்கு சான்றிதழ்கள், நினைவுச் சின்னங்கள், பொற்கிளி என்பன வழங்கி பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டதுடன் அதிதிகளுக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் பாவனை தடுப்பு மற்றும் விழிப்புணர்வு தொடர்பாது ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு



(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

போதைப்பொருள் பாவனை தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நிவாரணம் தொடர்பான பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு களுத்துறை மாவட்ட செயலக ஊடகப் பிரிவின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது

களுத்துறை மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான ஊடகம் தொடர்பான போதைப் பொருள் நிவாரண செயலமர்வு அண்மையில் இடம்பெற்றது. போதைப் பொருள் சம்பந்தமாக செய்தி தயாரிப்பு சம்பந்தமான சட்டநிலைப் பண்பாட்டின் பின்னணி தொடர்பில் களுத்தறை பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான விளக்கமளிக்கும் இந்த செயலமர்வு களுத்துறை மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

களுத்துறை மாவட்ட செயலக ஊடகப் பிரிவு, அரச தகவல் திணைக்களம் மற்றும் தேசிய அபாயகரமான ஔதடங்கள் கட்டுப்பாட்டுச் சபை ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைந்த பங்களிப்பில் மாவட்டத்தின் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான இந்த செயலமர்வு இடம்பெற்றது.

இன்று நாம் தேசமொன்று என்ற ரீதியில் எதிர்கொண்டுள்ள போதைப் பொருளுக்கு அடிமையாகும் மக்கள் மற்றும் தொடர்பான செய்தி அறிக்கையிடலின் ஒழுக்க விதிமுறைகள் சம்பந்தமான பல்வேறுபட்ட விடயங்கள் செயலர்வில் கலந்துரையாடப்பட்டது.

இந்த செயலமர்வில் தேசிய அபாயகரமான ஔதடங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஊடகப் பேச்சாளரும் தகவல் அதிகாரியுமான சாமர கருணாரத்ன, அரசாங்க தகவல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எல். பீ.திலகரட்ன உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வளவாளர்கள் கலந்துகொண்டு துறைசார்ந்த விரிவுரைகளை வழங்கினர்.

மேலும் இந்த செயலமர்வில் மேலதிக மாவட்ட செயலாளர் சானிகா திரிமான்ன, தேசிய அபாயகரமான ஔதடங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொஹொலானே கெதர, களுத்துறை மாவட்ட போதைப் பொருள் கல்வி அதிகாரி சாமனி ஜீவந்திஇ மாவட்ட ஊடக அதிகாரிகளான சமன் குலரத்ன, ஜீவந்தி உதடியால, மாவட்ட ஊடகவியலாளர்கள், எழுத்தாளர் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# பேருவளை மாளிகாஹேனை பைத்துல் முபாரக் தக்கியாவில் ஸஹீஹுல் புஹாரி ஹதீஸ் மஜ்லிஸ்

(பீ.எம் முக்தார்)

வரலாற்று புகழ்மிகு பேருவளை மாளிகாஹேனை பைத்துல் முபாரக் வதாருல் முஸ்தபா புஹாரித் தக்கியாவில் 146வது வருட புனித ஸஹீஹுல் புஹாரி ஹதீஸ் பராயண மஸ்லிஸ் எதிர்வரும் (28-12-2024) அதிகாலை ஸுபஹ் தொழுகையின் பின்னர் ஆரம்பமாகும்.

காதிரிய்யத்துன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய நாயகம் அல் ஆலிமுல் பாழில் வஷ்ஷெய்/ஹ காமில் அஹ்மத் பின் முஹம்மத் ஆலிம் காதிரிய்யதுன் நபவி தலைமையில் இப் புனித மஜ்லிஸ் ஆரம்பிக்கப்படும்.

வெள்ளிக்கிழமை தவிர தொடர்ந்து ஒரு மாத காலம் புனித ஸஹீ/ஹல் புஹாரி ஹதீஸ் பராயணம் செய்யப்படுவதோடு, விளக்கவுரையும் இடம் பெறும்.

2025 ஜனவரி மாதம் 30ஆம் திகதி (30-01-2025) முற்பகல் தமாம் பெரிய கந்தூரி இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புஹாரிக் கந்தூரி மஜ்லிஸை முன்னிட்டு இலங்கை ரயில்வே திணைக்களம் 146வது வருடமாகவும் 2025 ஜனவரி 29ம், 30ம் திகதிகளில் கொழும்பு – அளுத்கம, காலி – அளுத்கம இடையே விஷேட ரயில் சேவைகளை நடாத்தவுள்ளது.

அத்தோடு, கரையோர ரயில் சேவையில் ஈடுபடும் சகல கடுகதி ரயில் வண்டிகளும் ஜனவரி 29ம், 30ம் திகதிகளில் பேருவளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்படும். மேலும் அளுத்கம – களுத்துறை இடையே விஷேட பஸ் சேவைகளும் இடம் பெறவுள்ளன.

கந்தூரி மஜ்லிஸில் நாட்டின் நாலா பகுதிகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் பங்குபற்றுவர். பேருவளை பொலிஸார் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வர்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற பைத்துல் முபாரக் வதாருல் முஸ்தபா புஹாரித் தக்கியா பாரிய அளவில் மிக அழகான முறையில் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கந்தூரி தமாம் தினமும் அதற்கு முன்னைய தினமும் நபவிய்யா இலவச மருத்துவ சேவை முகாமும் புஹாரித் தக்கியா வளவில் இடம் பெறவுள்ளது.



இஹ்ஸானிய்யா அரபுக் கல்லூரியின் ஆலிம்கள் மற்றும் ஹாபிழ்களுக்கான 3வது பட்டமளிப்பு விழாவும் கல்லூரியின் 35வது வருட பூர்த்தி விமாவும் நேற்று முன்தினம் (22) ஞாயிற்றுக் கிழமை கல்லூரியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அல் ஹாபிழ் உமர் நியாஸ் (இஹ்ஸானி) தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது.

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

## வாசிப்பீராக! 17



பிஸ்தாமி அஹமத்

# அகல்விரி வாசிப்பு

அகல்விரி வாசிப்பு மட்டுமே எமது சிந்தனைத் தளத்தை மாற்றி மேம்படுத்தி விடும். பரந்த நிலையிலான வாசிப்பின் மூலம் தான் எமது சிந்தனைகள் மாற்றமடையும். நுனிப்புல் மேய்கின்ற மேம்போக்கான வாசிப்பால் எத்தகைய தளமாற்றத்தையும் கண்டு கொள்ள முடியாது. அத்தகைய வாசிப்பு அரைகுறை வாசிப்பாகவும் குறிப்பிட்ட துறை சார்ந்த முழுமை அடையாத பார்வையையும் தரத்தக்கதாக மாறும். அறிவை சாதாரண பொழுதுபோக்கு அம்சமாக காலத்தை கடத்துகின்ற ஒரு விடயமாக மாத்திரம் பார்க்காமல் அதனை வணக்கமாக பேரிலக்காக மாற்றிக் கொண்டால் மட்டுமே அது தரக்கூடிய முழுமையான விளைவை எமக்கு அடைய முடியும்.

எந்தவிதமான பெருமானமும் அற்ற அல்லது ஒப்பீட்டளவில் குறைந்த பெறுமானம் உள்ள ஒன்றை இறைவன் தன்னுடைய இறுதி தூதருக்கு முதல் கட்டளையாக கொடுத்திருக்க எந்த வாய்ப்பும் இல்லை.

21ம் நூற்றாண்டு பேசுகின்ற கல்விப்புல பேசும் பொருள்களில் வாழ்நாள் நீடித்த கல்வி மிக முக்கியமானது. இந்த வாழ்நாள் நீடித்த கல்வியை சாத்தியமாகக் கூடியது தான் அகல்வி கோணத்தில் ஆன தொடர் வாசிப்பு.

இது மட்டுமே துறை சார்ந்தஅறிவை பரவலடையச் செய்யும். அத்துறையில் மென்மேலும் பிறந்த ஆய்வுகள் சிந்தனைகள் மாற்றங்கள் ஏற்பட காரணமாக இருக்கும். மேம்போக்கான சிந்தனைகளை விட பல படிகள் மேலே சென்று அகன்று விரிந்த கோணத்தில் அனைத்தையும் அலசி ஆராய்ந்து உற்று நோக்கத் தூண்டும். எமக்கு ஆழ்ந்த வாசிப்பும் அவதானமுமே உலகை வெல்ல வழியமைக்கும்.

வாசிப்பு எமது அன்றாட செயல்பாடாக மாற வேண்டும் வாசிக்காமல் ஒரு நாளைக் கூட நிறைவுக்கு கொண்டுவரக் கூடாது என்ற திட சங்கட்ப்பும் என் எல்லோருக்கும் வர வேண்டும். வாசிப்பதற்கான பெரு நூல் பட்டியல் ஒன்று எமக்கு முன்னால் எப்பொழுதும் இருக்க வேண்டும் புத்தகங்கள் குறித்த கலந்துரையாடல்களும் அலசல்களும் அவதாரங்களும் விமர்சனங்களும் அறிமுகங்களும் தொடர்கின்ற பட்சத்தில் மாத்திரம் தான் வாசிப்பு அகலிக்கும்.

வாசிப்பின் அகல்விது தன்மை என்பது ஒரே நேரத்தில் ஏழு எட்டு புத்தகங்களை விரித்து வாசிப்பதல்ல ஒரே ஒரு புத்தகத்தை வாசித்து முடித்தாலும் புத்தகம் நூலாசிரியர் புத்தகத்தின் கருத்துக்கள் அது தொடர்பான அவதானங்கள் விமர்சனங்கள் மாற்றுக்கருத்துக்கள் போன்றவை குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெறுவது தான் இங்கு அகழ்விரிவான ஆழமான வாசிப்பு என அடையாளப்படுத்தப்படுகிறது இந்த வகையில் நம் வாசிக்கும் எல்லா நூல்களுக்கும் இத்தகைய ஒரு முறையை நுட்பத்தை கையாண்டால் எமது வாசிப்பின் வீச்சு இல்லை விசாலமாகும் பிறந்த ஒரு சிந்தனை நுண்மதி போன்றிடவும் விருத்தி அடைவதற்கு இது நிச்சயம் வழியமைக்




நாச்சியாதீவு
பர்வீன்

# “ஜின்னின் இரு தோகை”

– ரிஸ்வி யூ முஹம்மது நபீல் –

மண்ணிலிருந்து ஊர்ந்து வரும் நில உடலிகள் பல்வேறு ஒளிச் சிதறல்களில் கசிந்து நிறப் பிரிகைகளால் நிழல்களாக உடலின் அரூபங்களை மணல் முற்றங்களில் வரைந்து மனத்தில் கனவுத் தன்மைகளையும் மயக்க நிலைகளையும் படர்த்துவன்

காரிருளில் அசைந்து அசைந்து வரும் சிமிழ் விளக்குகளும் பற்றி எரியும் தீப்பந்தங்களும் இருள் கசியும் மணற் பரப்பில் சுழலும் வண்ண ஒளிகளில் காட்சி ரூபம் கொண்டு அழகு செய்கின்றன்

இப்போது அனாரின் கவிதையொன்றைப் படியுங்கள்:

**ஒற்றை முத்தம்**

களங்கமின்மையின் பளிங்கொளியாய்
மலையுச்சியில் சரிந்து கிடந்தாய்
பிரித்தெடுக்க முடியாதவாறு
பள்ளத்தாக்கின் கருங்குழிகளை
ஒளியால் பூசுகிறாய்

மரங்களின் இடைவெளிக்கூடாக
விழுந்த
இறந்தகால வெட்கங்களின்
வெளிச்சத் தீற்றல்களைத்
திரும்ப நினைத்து நாணமுறுகிறேன்

என் விலாவிலிருந்தே கேட்கின்றன
நம் ரகசிய வெட்டுக் கிளிகளின்
கீச்சிடுதல்கள்

மௌனம் உருவாக்கிய பாறைத்
தழும்புகளை
ஊடறுத்துக் கொட்டும் அருவிக்குள்
என்றோ தந்து போன ஒற்றை முத்தம்
கூழாங்கற்களில் உருண்டு
உரசிச் சத்தமெழுப்புகின்றது

கற்களின் இடுக்குகளுக்குள்ளே
தாபத் திவலைகளின்
நீர் வளையங்களாகிறேன்

உன் கண்கள் ரகசியங்களுடன்
சுழலும் பொழுதெல்லாம்
இரவின் சதுப்பு நாணல்களுக்குள்
புதைக்கின்றன நட்சத்திரங்கள்

ஓர் ஆணும் பெண்ணுக்குமான
ரகசிய வாழ்வின் ஆதாரம், சுழலியலின்
நசிவை வீரியமிக்க ஒளி படர்ந்த

கண்களுடாகக் காணும் மாற்றங்களையும் முனைப்பையும் மீளாக்கம் செய்கிறது கவிதை.

அனார் எனது பக்கத்து ஊர், நான் திருமணம் முடித்த வகையில் கைனத் தெரு அந்த வழியில் ஒரு தொப்புள் கொடி உறவும்தான்.

அவர் வாழ்ந்த மண், அதே கிராமம் எனக்கு ஒரு போதும் அந்நியமில்லாத ஓர் ஈரத் துணியால் போர்த்தியவற்றுள்ளிருந்து, அவர் கவிதை விதைகள் முளைத்துத் நிமிர்வதை நான் நேரில் காண்பவன்.

அவர் கவிதைகளில் வரும் செம் மூதாய்க் கிழவிகளை, அவர் பார்த்த அதே தலைப்பிறையின் திசையை, பொன்னிற நத்தைகளின் சிலிர்ப்பை, அங்கு பெய்யும் மழையாடங்களை நானும் ஒரே நேரம் நின்று ரசிப்பவன்.

மூன்று நாளைக்கு ஒருமுறை காய்ச்சலோடு நடுங்கிக் கிடப்பாள் மனைவி சொல்லுவாள் ”ரிஹானாவின் குரல் நடுங்குகிறது” என்று

”காய்ச்சல் நிறத்துப் பெண்” என்று நானும் ஒரு கவிதை எழுதினேன்.

என் மகளின் அனார் மாமியுடனான பேரன்பு அலாதியானது.

பழங்கள் என்றாலே சேகரிக்கும் விருப்பம் நிறைந்த இளம் பருவத்து நாட்கள் அவளுடையது. அப்போதெல்லாம் இருள் பிரிவதற்கு முன்பே எழுந்து பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு எங்கள் புறத்தி வளவில் நின்ற நறுபுளி மரத்தை நோக்கி ஓடுவாள், அவளின் தேடல் வேட்டையில் ஒரு சுரங்கைப் பழங்கள் கிடைக்கும்.

சரி பாதியை அனார் மாமிக்கென்று ஒதுக்கி வைப்பாள்.

அடுத்தடுத்த வீடுகளில் வசித்து வந்த என் மகளின் தோழிகள் அதனை பதுக்கிச் சென்று விட்டிருப்பார்கள். அனாருக்கு இது தெரியவே தெரியாது.


எனது மாமியும் அவரின் தாயாரும் இணை பிரியாத கூட்டாளிகள், அனாரின் இரண்டு பெண்கள் கவிதை இதுதானோ தெரியாது.

**“காலங்களைக் கண்களில் நிரப்பியவள்”**

மெழுகுக் கனாத் தூண்களில்
சாய்ந்திருக்கிறேன்
கண்களே தியான மண்டபம்
இமைகள் சுமந்தாடுகிற கடலின்
நீர் ஊஞ்சல்களில் தாவி ஆடுகிறோம்

பவளப் புற்றுகளின் ஆழத்தில்
நமது சொற்கள் இணைவின்
இழைகளால் நீந்துகின்ற
நட்சத்திர மீன்களாகின்றன

கள்ளமும் தூய்மையும் கலந்த ருசி
விழிகளை அருந்துவதால்
விபரிப்புகளுக்குப் புலப்படாத




அடர் மஞ்சள் வெயிலில் தழும்பும்

மௌனத்துக்கும்
உரையாடலுக்குமிடையே
பெறப்படாத முத்தங்கள்
நம் கண்கள்

அதிசயங்களை விட
மகத்தான ஒன்றின் அருகில்
மலைப்பூட்டக்கூடியதைக் கவனித்துக்
கொண்டிருக்கிறோம்
இச்சையில் உடல் கரைந்த பின்
மித மிஞ்சிய அதே கண்களால்.

இந்தக் கவிதையில் ஒளிகள் இணைந்து ஓவியங்களாகின்றன. விரிந்துப் படர்ந்த பின்புலத்தில் நமது மன வெளியின் இருளில் அமர்ந்திருக்கும் இச்சைகளின் கனத்த பாய்ச்சல் பல்வேறுபட்ட படிமங்களைக் கிளர்த்துகின்றன.

”டேய் எப்படிடா இருக்க..” என்று பெயர் சொல்லி அழைத்தபடியே கூடத்துக்குள் வந்து தோளைத் தொட்டு இறுக்கிக் கொள்ளும் அன்பின் நெருக்கமான கவிதைகள் இத் தொகுப்பில் விளைந்துள்ளன.

வறுத்த நிலக்கடலையென்றால் அவருக்கு அதி பிரியம்.

நிறைய வாங்கி ஒரு டின்னில் அடைத்து வைத்துக் கொறித்துக் கொண்டிருப்பார்.

முன் வீட்டில் புறாக்களின் கூடொன்றிருக்கிறது சிறு மழைத் தூறலுக்கு அவை தெற்கே வட்டமிட்டு வந்திறங்கும் நிலக் காட்சியை ஒரு நாள் என்னிடம் பகிர்ந்திருக்கிறார்.

“கவிதைக்குள் மறையும் மழைக் காடுகள்”

என் கவிதைகளுக்குள்
மழைக்காடுகள் புதைந்துள்ளன
தீப்பிழம்புகள் கொண்டவானம்
காட்டின் இருளில் புதைந்துள்ளது

தகிப்பும் மழையும்
ஆர்ப்பரிக்கின்ற காடு முழுக்க
மந்திரித்து விடப்பட்ட விலங்குகள்
உள் அழைக்கின்ற கண்களால்
பின்வாங்குகின்றன

மழையும் சுவையும்
காற்றின் ஆழ்ந்த பசியும்
சதுப்பு நிலத்தில் உலவுகின்றன
அங்கே
மேயும் கபில நிறக் குதிரை
தொழுவம் அடையும் நேரம்

மஞ்சள் அலறிப் பூக்களை
மடியில் சேர்த்தெடுப்பவள்
எஞ்சிய உன் கண் சிமிட்டலையும்
எடுத்துப்போகிறாள்

வெதுவெதுப்பான மழைக் காடாக
உருக்கொள்கின்றன என் கவிதைகள்

மழை சிணுசிணுக்கும்
மென்மையான இரவின் கீழே
உன்னைப் புதைத்துக்கொள்

அனாரின் கனவில் வந்து போகின்ற உருவங்களில் கருத்த நெடிய மனிதர்கள், கபில நிறக் குதிரைகள், ஆளரவமற்று ஒளியிழந்த வீதிகள், திரைச் சீலைகள் என என் வீட்டுக்கு வரும்போது ஒரு கதையில் சொல்லியிருந்தது இப்போது ஞாபகம் வருகிறது.

எப்போதாவது பொழுதடைந்த வேளையில்தான் அனாரைப் பார்த்துப் பேச முடியும், ஏனைய நேரங்களில் மூச்சிழுத்தபடியே அவசர அவசரமாகப் பேசி முடிப்பார், ஏனென்று கேட்டதற்கு வீட்டில் நிறையப்பேர் சகோதரங்கள் குழுமி விடுவதால் அவர்களுக்கு ஆக்கிக் காய்ச்சிப் போடும் வேலைகளுடன் நானும் மல்லுக்கட்டுகிறேன் என்பார்.

சில கவிதைகளில் இந்தக் காட்சிச் சிதறல்களைத் தரிசிக்கலாம்.

என் முகத்தைப் பார்த்ததுமே பெருமூச்சோடு அவள் கண்கள் கலங்கிவிடும் காலங்களையும் நான் எதிர் கொண்டிருக்கிறேன்.

என்ன கவிதை எழுதினாலும்
அவளும் பெண்தானே!

இரண்டு பேரும் இலக்கில்லாமல் காலாற நடந்து, எங்கெங்கோ திரிந்து விட்டு, கடைசியில் குளத்தங்கரையில் வந்து நிற்பதுபோல் கவலைகளைப் பகிர்வதும் மரங்களின் நிழல்கள் ஒரு நீர்ப் பரப்பில் தெளிவாக விழுவதும் காற்றின் சுழற்சியால் ஓர் இலை விழுந்து அந்த நிர்மூலத்தில் வட்டங்கள் நகர்வதும் இப்போதும் இருந்திருந்து நிகழ்வதுதான்.

”பெண்”

மழைக்கு முன்பே
காற்றுக் குளிர்ந்துவிடும்போது
இலைப் பச்சையாக மாறி விடுகிறேன்

அடி நிலத்தின் கீழ்
திரவியமாய் விளைகிறேன்

பித்தமேற்றும்
ஆர்ப்பரிக்கும் கடலின்
உப்பை விழுங்கிய ஆகாயம்

கனவும் விஷமுமான
மந்திரம் நான்

காலங்களின் மீது
அறைகூவல் விடுக்கும்
சொல் ஒன்றின்
இடதும் வலதுமாவேன்


என்னை
எங்கு ஒளித்து வைக்க முடியும்.

மற்றுமொரு முக்கிய போக்காக வெளிப்பட்ட அவரின் அகவெளிக் கவிதைகள் பிறருக்குக் கட்டுப்படாத மாறுபட்ட படைப்புலகமாக தென்படுகின்றன.

கடல், வண்ணத்துப் பூச்சி, குளம், பறவை, பூ, சிலந்தி, செடி கொடிகள், நட்சத்திரங்கள், எனப் பிரபஞ்சம் சார்ந்த படைப்புகளில் பிரதியாக்கம் செய்கின்றன.

பெண்களுக்கு ஜீவனுண்டு, மனம் உண்டு அவர்கள் செத்த மந்திரங்களல்லர், உயிருள்ள செடி கொடிகளைப் போலவுமல்லர் ஆத்மாவின் எல்லா ஓலங்களும் நிறைந்தவர்கள்தான் அவர்களின் வலியை வேதனையை இப்படியும் சொல்லலாம் என்பதற்கு அனாரின் முதிர்ந்த கவிதைத் தொகுப்பாக ”ஜின்னின் இரு தோகை”யை அவதானித்தேன்.






அக்குறணை - தொடன்கொள்ள அல் இல்மா (Al ilma) முன்பள்ளி சிறுவர்களின் பட்டமளிப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமை (17) முன்பள்ளி வளாகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

(ராபி சிஹாப்தீன் )

## மனநலமும் ஆலோசனையும் 62

# நேரம் எப்படி கழிகிறது



இதுவரை நாங்கள் செலவழித்த நேரத்தைப் பற்றி எப்போதாவது யோசித்திருக்கிறோமா?

நன்றாக பயன்படுத்திய பிறகு தான் எனது நேரம் எங்களை விட்டு கடந்து போகிறது என்று நாங்கள் எப்போதாவது திருப்தி அடைந்திருக்கிறோமா?

நேரம் எமது விலைமதிப்பற்ற வளங்களில் ஒன்று.

நேரம் என்பது வாழ்க்கையின் நாணயம், ஒருமுறை செலவிட்டால், அதை நம்மால் திரும்பப் பெறவே முடியாது.

நாம் செலவழித்த பணத்தை என்றைக்கோ பெறலாம். அதைவிட அதிகமாகவும் பெறலாம்.

ஆனால் நாம் செலவழித்த அல்லது எம்மை விட்டு கடந்து போன நேரத்தில் ஒரு நொடியைக் கூட எம் உயிர் இருக்கும் வரை திரும்பப் பெறவே முடியாது.

நேரம் என்பது நாம். நாம் என்பது நேரம் என்று சொல்லும் அளவிற்கு நாமும் நேரமும் ஒன்றோடொன்று கலந்து இருக்கிறோம். கலந்து பயணிக்கிறோம்.

நமது மொத்த வாழ்க்கையும் நேரத்தோடு செல்கிறது.

நேரம் விலைமதிப்பற்ற நாணயம்.

நேரம் தான் நமது வாழ்க்கை. அதில் தான் நாம் பயணம் செய்கின்றோம்.

ஆனால் செய்ய வேண்டிய எத்தனையோ வேலைகளை செய்து முடிக்க போதுமான நேரம் கிடைப்பதில்லை என்று சொல்கின்ற பலரை நாம் சந்தித்து இருக்கலாம்.

"தங்கள் நேரத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று தெரியாமல் இருப்பது தான் அவர்கள் இப்படி சொல்வதற்கான பொதுவான காரணமாக கருதலாம்.

இதில் உள்ள மிகவும் மோசமான விடயம் எதுவென்றால் "நேரம் இல்லை" என்று சொல்லிச் சொல்லி காலம் கடத்துவது காலப் போக்கில் ஒரு பழக்கமாக மாறி, செய்ய வேண்டிய பல விடயங்களை செய்ய விடாமல் ஆக்கிவிடுவதாகும்.

இதனால் நாம் கட்டாயம் செய்ய வேண்டிய, மிகவும் முக்கியமான பல விடயங்கள் எங்களை அறியாமலே முக்கியத்துவம் அற்றவையாக ஆகிப்போவதை பலர் மரணிக்கும் வரை புரிந்து கொள்வதில்லை.

நாம் ஒருபோதும் இழக்கக்கூடாத மிகப் பெறுமதியான நாணயம் நேரம்.

நேரம் எங்களை விட்டு பிரிந்து போவதை தடுக்க முடியாது ஆனால் அது பிரிந்து போகுமுன் நன்றாக பயன்படுத்தப்பட வேண்டும்.

வாழ்க்கையில் நன்றாக பயன்படுத்தப்பட்ட நேரம் தான் மிகவும் பெறுமதியான நேரம்.

பயன்படுத்தப்படும் நேரம் தான் ஆக்கப்பூர்வமான நேரம்.

எங்கள் நேரம்.....

ஆக்கப்பூர்வமாக கழிகிறதா?

நன்கு பயன்படுத்தப்பட்டு கழிகிறதா?

உச்ச பயனை அடைந்து விட்டு கழிகிறதா?

எப்படிக் கழிகிறது....

சிந்திப்போம்...



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




# உனக்காக உள்ளவர்கள்!

உனக்காக ஒருவரையேனும்
எதிர்த்தவர்கள் இருக்கிறார்களா
உன் பாதையில் சிறு முள்ளையேனும் அகற்றியவர்கள் இருக்கிறார்களா
உனக்காக ஓர் அடியையேனும் எடுத்துவைத்தவர்கள்
இருக்கிறார்களா
உன் சொல்லுக்காய் தம் ஒரு பழக்கத்தையேனும் மாற்றிக்கொண்டவர்கள்
இருக்கிறார்களா
உனக்காக ஒரு படியையேனும் தாண்டியவர்கள் இருக்கிறார்களா
உன் சார்பில் ஒரு முறையேனும் குரல் கொடுத்தவர்கள் இருக்கிறார்களா
உனக்காக துளிக் கண்ணீரையேனும் சிந்தியவர்கள் இருக்கிறார்களா
உன் நலனுக்காய் கையேந்திப் பிரார்த்தித்தவர்கள் இருக்கிறார்களா
உனக்கான பலிபீடங்களில் தம் தலை கொடுக்கத் துணிந்தவர்கள்
இருக்கிறார்களா.

ஆம்
எனில்
வாழ்த்துக்கள்

உனக்கென
இவ்வாழ்வில்
ஆசிர்வதிக்கப்பட்டவர்கள்


தேவை தீர்ந்ததும்
விலகியோடும்
உறவுகள்
மத்தியில்

அவர்களே
இறுகப்பற்றிக்கொள்
அவர்தம்
கரங்களை
ஆமின்

– ரிஸ்கா முக்தார் –

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்)
வெளிவருகின்ற **"உதயம்"**
பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.
editor.uthayam@gmail.com



# மூத்தம்மா கதை

நாம சின்னப் புள்ளையா இரிந்த டைம்ல பொழுது போவணும் எண்டா மூத்தம்மா கதை சொல்லணும். அதுக்கு அவ சொல்ற எல்லாத்தயும் நாம செஞ்சி குடுக்கணும்.

அதாவது, கொச்சிக்கா, வெங்காயம், வெள்ளைப்பூடு எண்டு என்னத்தத் தந்தாலும் உரிச்சிக் குடுக்கணும்.

வெத்திலப் பொட்டியக் கேட்டா, படிக்கத்தைக் கேட்டா கொண்டு போய் குடுக்கணும்.

பீங்காங்கோப்பைய கழுவுறத்துக்கு கிணத்தடிய கொண்டு போய்க் குடுக்கணும்.

கழுவினத்துக்குப் பொறவு குசினிக்க கொண்டு போய் வெய்க்கணும்.

ஊடு திண்ணை கூட்டணும்.

ஈக்கிமார எடுத்துக் குடுக்கணும்.

மூத்தப்பாக்கு ஊத்தித் தார தேத்தண்ணியக் கொண்டு போய்க் குடுக்கணும்.

மரக்கறி மாமா, மீன்கார மூத்தப்பா இப்பிடி யாரு போனாலும் "நில்லுங்கேய் நில்லுங்கேய்" எண்டு தொண்டைத் தண்ணி வத்தக் கத்தணும்.

மீன்கழுவுற தண்ணியக் கொண்டு போய் தென்னைமரத்தடிய ஊத்திட்டு வரணும்.

அந்தத் தண்ணிக் குறச்சி பாரமா இருந்தா மூத்தம்மா போய் ஊத்திட்டு வரும் வரைக்கும் மீனுக்கு காவல் இருக்கணும்.

அரிசிக்க கல்லுப் பொறக்கிக் குடுக்கணும்.

அடுப்புக்கு கல்லுத் தூக்கிக் குடுக்கணும்.

உரிமட்டைய பிச்சிக் குடுக்கணும்.

கடைக்கி போய் சாமான் வாங்கிக் கொண்டந்து குடுக்கணும்.

பக்கத்து ஊட்டு மாமிக்கி கறிகொண்டு போய்க் குடுக்கணும்.

கொடியில காயப் போட்ட உடுப்புக் காஞ்சிட்டா எண்டு பார்த்து எடுத்துட்டு வரணும்.

நம்மட உடுப்பை நாமளே மடிச்சி அடுக்கி வைக்கணும்.

வளவுக்க கிடக்குற கல்லெல்லாம் பொறக்கி ஒரு மூலையில குமிக்கணும்.

கொஞ்சம் அவக்கு குர்ஆனை எடுத்து ஓதிக் காட்டணும். ஓதி முடிய தமிழ் புத்தகத்துல எதெண்டாலும் ஒரு பந்திய வாசிச்சிம் காட்டணும்.

சரியா இஷாத் தொழுவி முடிய பனைமரத்தடிய கொண்டு போய் புல்லுப்பாய விரிக்கணும்.

இதெல்லாம் செஞ்சாத்தான் மூத்தம்மாட கதையில ராஜாவும், ராணியும், சூனியக்காரக் கிழவியும், அந்த அழகான தேவதையும் வருவாங்க.


ஆனா என்ன பலன்? இவ்ளோ வேலை செஞ்ச சவுப்புல, ராஜா குதிரையில காட்டுக்க போவக்குலயே நமக்கு நித்திரை பெயித்திடும்.

எது எப்டியோ அந்த வாழ்க்கை அழகானது.

**நிலாத்தோழி**
**(பரீனா பின்த் இஷ்ஹாக்)**







அரபாத் பஹுர்தீன்

# றொனால்டோவுடன் இணைந்து விளையாட வேண்டும் எம்பாக்பே

உலகின் முன்னனி நட்சத்திர உதைப்பந்தாட்ட வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோவுடன் இணைந்து விளையாட விரும்புவதாக இளம் நட்சத்திர வீரரான பிரான்ஸின் கிளையன் எம்பாப்பே தெரிவித்துள்ளார். தற்போதைய உலக உதைப்பந்தாட்டத்தின் புகழ்பெற்ற வீரர்களில் ஒருவரான மாறியிருப்பவர்தான் பிரான்ஸின் முன்கள வீரரான கிளையன் எம்பாப்பே. பிரான்ஸின் பாரிஸ் சையிண்ட் ஜெர்மனி கழகத்தில் எம்பாப்பே லயோனல் மெஸ்ஸியுடன் இணைந்து சில ஆண்டுகள் விளையாடியிருந்தார். பின்னர் மெஸ்ஸி அமெரிக்க கழகத்துடன் ஒப்பந்தம் செய்து பிரான்ஸ் கழகத்திலிருந்து வெளியேறியிருந்தார்.

இந்நிலைரயில் லயோனல் மெஸ்ஸியுடன் இணைந்து விளையாடியதை தன்னால் மறக்கவே முடியாது என கூறியிருக்கின்றார் எம்பாப்பே. அதைப்போல உதைப்பந்தாட்ட உலகில் மேலும் ஒரு சிறந்த வீரரான பிரேஸிலின் நெய்மர் உடனும் இணைந்து விளையாடியிருக்கிறார். ஆனால் உலகின் பல பில்லியன் ரசிகர்களைக் கொண்ட போர்த்துக்கல் அணியின் தலைவரான கிறிஸ்டியானோ றொனால்டோவுடன் மட்டும் எம்பாப்பே இதுவரையில் இணைந்து விளையாடியதே இல்லை. அவருடன் தான் இணைந்து விளையாட வேண்டும் என்ற தனது ஆசையை சமீபத்தில் எம்பாப்பே தெரிவித்திருக்கின்றார். பி.எஸ்.ஜி அணியை விட்டு வெளியேறிய பிறகு எம்பாப்பே ரியல்மாட்ரிட் அணியில் சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் றொனால்டோ தற்சமயம் சவுதி அரேபியாவின் அல் நசர் கழகத்தில் ஒப்பந்தமாகி விளையாடி வருவதனால் எம்பாப்பேவின் ஆசை கனவாகவே ஆகலாம் எனலாம்.

# நியூஸிலாந்து பதினொருவர் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் இலங்கைக்கு இலகு வெற்றி



இலங்கை அணிக்கும் நியூஸிலாந்து பதினொருவர் அணிக்கும் இடையிலான முதல் ரி20 பயிற்சிப் போட்டியில் இலங்கை அணி 32 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பணயம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும் நியூஸிலாந்து அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி20 மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் ஆகிய வெள்ளைப்பந்து தொடர்களில் முதலில் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் ரி20 போட்டி ஆரம்பிக்கின்றது.
அதற்கமைய ஒரேயொரு ரி20 பயிற்சி ஆட்டத்தில் இலங்கை அணி கடந்த 23ஆம் திகதி நியூஸலாந்து பதினொருவர் அணியை லின்கோலில் எதிர்த்தாடியது. மழை காரணமாக அணிக்கு 10 ஓவர்கள் வழங்கப்பட்ட போட்டியின் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 10 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் பெத்தும் நிஷங்க 31 ஓட்டங்களையும், வனிந்து ஹசரங்க 27 ஓட்டங்களையும், பானுக ராஜபக்ஷ 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் மெத்யூவ் பிஸ்ஸர் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.
பின்னர் 129 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த நியூஸிலாந்து பதினொருவர் அணியால் 10 ஓவர்களில் 2விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொள்ள முடிந்தது. துடுப்பாட்டத்தில் மெத்யூவ் பொய்லி ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் நுவான் துஷார 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். இதனால் இலங்கை அணி 32 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.



# தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரை வெள்ளையடித்துக் கைப்பற்றியது பாகிஸ்தான்

தென்னாபிரிக்கா அணிக்கு எதிராக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் 3ஆவதும், இறுதியுமான போட்டியில் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 36 ஓட்டங்களால் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி தொடரை 3:0 என வெள்ளையடித்துக் கைப்பற்றியது.
இவ்விரு அணிகளுக்கும் இடையிலான மூவகைக் கிரிக்கெட் தொடரில் முதலில் நிறைவுக்கு வந்த 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் 3ஆவது போட்டி மழையால் கழுவப்பட்டமையால் 2:0 என பாகிஸ்தான் வெற்றி கொண்டது. பின்னர் ஆரம்பித்த 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் இரு போட்டிகளிலும் பாகிஸ்தான் வெற்றி கொண்டு ஒரு போட்டி மீதமிருக்க தொடரை 2:0 என தனதாக்கியிருந்தது.
இந்நிலையில் கடைசி ஒருநாள் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜொகனஸ்பேர்க்கில் நடைபெற்றது. மழை காரணமாக நாணயச்சுழற்சி தாமதமாகி இன்னிங்ஸ் 47 ஓவர்களாக குறைக்கப்பட்டது.
பின்னர் இடம்பெற்ற நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடியது. அதற்கேற்ப 47 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து 308 ஓட்டங்களை குவித்தது.
துடுப்பாட்டத்தில் ஆரம்ப இளம் வீரர சைம் அயூப் 101 ஓட்டகங்களையும், ரிஸ்வான் மற்றும் பாபர் அஸாம் ஆகியோர் முறையே 53 மற்றும் 52 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ரபாடா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.
தொடர்ந்து 309 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற வெற்றி இலக்குடன் களம் நுழைந்த தென்னாபிரிக்கா அணியால் வெறும் 42 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 271 ஓட்டங்கள் மாத்திரம் பெற்ற முடிந்தது. துடுப்பாட்டத்தில் க்ளாஸன் 81 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் சுபியான் முகீம் 4 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டினார்.
இதன் மூலம் 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3:0 என முழுமையாக வெள்ளையடித்துக் கைப்பற்றியது. இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் இரு சதங்களை விளாசிய சைம் அய்யூப் தெரிவானார். மேலும் பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தின் இறுதித் தொடரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நாளை (26) பொக்சிங் டே டெஸ்ட் போட்டியாக ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.